Registered as a Newspaper

பக்கங்கள் 16+6+II

விலை ரூ. 60

# உதயன்

சுடர் : 38
கதிர் : 148

ஞாயிற்றுக்கிழமை 23 ஏப்ரல் 2023

சித்திரை 10 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

வெட்டியும் கொத்தியும் கொலையாளி வெறியாட்டம்

100 வயது மூதாட்டி படுகாயம்

படகுப் போக்குவரத்து முடக்கம்

மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம்

சந்தேகநபர் ஒருவர் கைது?

# நெடுந்தீவில் 5 வயோதிபர்கள் படுகொலை!



கோரக் கொலைகள் நிகழ்ந்த வீடு

## கொலையுண்டோர்

- வீட்டு உரிமையாளரான **கெ.நாகசுந்தரி** (வயது-83) (இவரது கணவர் குமுதினிப் படகு படுகொலையில் உயிரிழந்தவர்)
- அவரது சகோதரியான முல்லைத்தீவு - செல்வபுரத்தைச் சேர்ந்த **பாலசிங்கம் கண்மணிப்பிள்ளை** (வயது - 76)
- கண்மணிப்பிள்ளையின் கணவரான **நாகநாதி பாலசிங்கம்** (வயது - 82)
- வீட்டு உரிமையாளரின் இன்னொரு சகோதரியான லண்டனிலிருந்து வருகை தந்த **வேலாயுதபிள்ளை நாகரத்தினம்** (வயது - 78)
- நெடுந்தீவைச் சேர்ந்த உறவினரான **சுப்பிரமணியம் மகாதேவா** (வயது -74)

காயமடைந்தவர்
கனகர் பூரணம் (வயது - 100)

யாழ்ப்பாணம், ஏப்ரல் 23

நெடுந்தீவு, மாவிலி இறங்குதுறையை அண்டிய பகுதியில் கடற்படை முகாமுக்கு முன்பாகவுள்ள வீட்டில் தங்கியிருந்த வெளிநாட்டவர் உட்பட 5 பேர் வெட்டுக்காயங்களுடன் நேற்றுக் காலை சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்களில் 3பேர் பெண்கள். இருவர் ஆண்கள். வெளிநாட்டவரான 100 வயதுப் பெண்மணி படுகாயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார். »15



நாகசுந்தரி | பாலசிங்கம் | நாகரத்தினம் | மகாதேவன்

## வடக்கில் இனி மழை

யாழ்., ஏப். 23
வடக்கு மாகாணத்தில் நேற்றுமுதல் எதிர்வரும் »15

## யாழில் காற்றுடன் நேற்று மழை

அம்பனில் மின்னல்

யாழ்., ஏப். 23
யாழ்ப்பாணத்தில் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பிரதேசத்தில் »15

## நடிகர் திலகத்தின் மகன் யாழில்

யாழ்., ஏப். 23
நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகன் ராம்குமார் உள்ளிட்ட குழுவினர் »13

## ஹர்த்தாலுக்கு ஆதரவைக் கோரி களத்தில் இறங்கிய தலைவர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 23
வடக்கு மற்றும் கிழக்கு தழுவிய ரீதியில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள ஹர்த்தாலுக்கு ஆதரவுகோரி தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், தொண்டர்கள் நேற்று »16

ஹர்த்தாலுக்காக

## உழைப்பாளிகளே மன்னியுங்கள்

சிறீகாந்தா உருக்கமான கோரிக்கை

விரிவு:- பக்.15

## வடக்கு - கிழக்கு ஆயர்கள் ஹர்த்தாலுக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 23
தமிழ்த் தேசியக் கட்சிகளால் தமிழர் தாயகத்தில் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட ஆயர்கள், யாழ்ப்பாணம் »02

## மாடு கடத்தும் மாபியா; மாட்டியது பொலிஸிடம்!

இன்னும் நால்வருக்கு வலைவீச்சு

யாழ்ப்பாணம், ஏப். 23
யாழ். குடாநாட்டில் பரவலாக கடந்த சில மாதங்களாக இரவுவேளைகளில் மாடுகளைக் கடத்திய மாபியாக் கும்பலின் பிரதான சூத்திரதாரி என்று நம்பப்படும் இளைஞனையும் இன்னொருவரையும் கைது செய்துள்ளதாக தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கும்பலிடம் இறைச்சி வாங்கி விற்பனை செய்த வரும் கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் 4 பேர் தேடப்படு »16

வடக்கு - கிழக்கு பல்கலை

## மாணவர் ஒன்றியங்களும் கடையடைப்புக்கு ஆதரவு

யாழ்ப்பாணம், ஏப். 23
பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் தமிழர் தாயகத்தில் முன்னெக்கப்படும் பௌத்த - சிங்களமயமாக்கலை எதிர்த்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளால் »02

சஞ்சீவி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### தடுப்பில்வைத்து கடும் வதை

# இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேச தீர்ப்பாயம் தீர்ப்பு

**கொழும்பு, ஏப். 23**

**இலங்கைப் பொலிஸாரால் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக்குழு தீர்ப்பாயத்தின் (சர்வதேசத் தீர்ப்பாயத்தின்) 17 பேரடங்கிய நீதியரசர் குழாம் இலங்கைக்கு எதிராகத் தீர்ப்பு வழங்கியுள்ளது.**

சுவிற்சர்லாந்துக்குத் தப்பிச்செல்வதற்கு முன்னதாக இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரொருவர் இலங்கைப் பொலிஸார் தடுப்பு முகாமில்வைத்து தன்னை சுமார் ஒருமாதகாலமாக கிரிக்கெட் மட்டையால் தாக்கினார்கள், மின்சாரம் பாய்ச்சி சித்திரவதை செய்தனர் மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கினார்கள் உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். அவரின் சார்பில் கடந்த 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவிடம் முறைப்பாடளிக்கப்பட்டது.

அதன்படி இம்முறைப்பாடு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் திரட்டப்பட்ட ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் மீளாய்வுக்குழுவின் தீர்ப்பாயத்தின் 17 பேரடங்கிய நீதியரசர் குழாம் சித்திரவதைகளால் பாதிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினருக்கு ஆதரவாகவும், இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவும் தீர்ப்பு வழங்கியிருக்கின்றது.

குறிப்பாக மேற்படி நபரை மிக மோசமான சித்திரவதைகளுக்கு உட்படுத்தியமை தொடர்பில் இலங்கை அரசாங்கத்தைக் கடுமையாகக் கண்டித்திருக்கும் நீதியரசர் குழாம், சுதந்திரமான விசாரணைகளின் மூலம் இந்தச் சித்திரவதைகளுக்குப் பொறுப்பான பொலிஸ் அதிகாரிகளைக் கண்டறியுமாறும், அவர்களுக்கு உரியவாறான தண்டனை வழங்கப்படுவதை உறுதிசெய்யுமாறும் இலங்கை அரசாங்கத்துக்கு உத்தரவிட்டுள்ளது.

அதுமாத்திரமின்றி பாதிக்கப்பட்ட நபருக்கு இலங்கை அரசாங்கம் போதியளவான இழப்பீட்டைச் செலுத்தவேண்டும் என்றும், இத்தகைய சம்பவங்கள் மீண்டும் நிகழாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டும் என்றும் ஐ.நா. மனித உரிமைகள் மீளாய்வுக் குழுவின் தீர்ப்பாயத்தில் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## வெப்பம் தணியும் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

வடக்கு, கிழக்கு மற்றும் மத்திய மாகாணங்களில் மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் உள்ளதாவது:

குறித்த மாகாணங்களில் சில இடங்களில் 75 மில்லிமீற்றருக்கு மேல் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. ஏனைய மாகாணங்களில் மாலை அல்லது இரவு வேளையில் சில இடங்களில் இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். மேல் மாகாணத்தில் காலை வேளையில் மழை பெய்யக்கூடும். அதேவேளை தற்போது நிலவும் வெப்பமான காலநிலை சற்றுக் குறைவடையும் வாய்ப்புள்ளது- என்றுள்ளது. (ச-இ)

## நாட்டின் பல பகுதிகளில் நேற்று நோன்புப் பெருநாள் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 23

இஸ்லாமியர்களின் நோன்புப் பெருநாள் நாடளாவிய ரீதியில் நேற்றுச் சனிக்கிழமை கொண்டாடப்பட்டது.

யாழ்.பெரிய மொஹிதின் ஜும்மா பள்ளிவாசலில் நோன்புப் பெருநாள் தொழுகை பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஆர்.எச்.ஆஹிக் ஜமால் தலைமையில் நடைபெற்றது. வவுனியாவில் நகர பள்ளிவாசல் உட்பட பல்வேறு பகுதிகளிலும் நோன்புப் பெருநாள் விசேட தொழுகை இடம்பெற்றது.

வவுனியா பட்னிச்சூர் முஹிய்யத்தீன் பள்ளிவாசலில், பள்ளிவாசலின் பிரதான மௌலவி அலாவுதீனால் விசேட தொழுகை மேற்கொள்ளப்பட்டது. இதில் பெருந்திரளான இஸ்லாமியர்கள் கலந்துகொண்டு தொழுகையில் ஈடுபட்டதுடன் பெருநாள் வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர். பள்ளிகளிலும் தொழுகைக்கூடங்களிலும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-14,110)

## பள்ளிவாசலில் தாக்குதல்; போலித் தகவலாளி கைது

கொழும்பு, ஏப். 23

பள்ளிவாசலொன்றின் மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படக்கூடுமென போலித் தகவல் வழங்கிய சந்தேகநபர் சி.ஐ.டி.யினரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கண்டி - அக்குறணை பகுதியிலுள்ள பள்ளிவாசல் ஒன்றின்மீது குண்டுத்தாக்குதல் நடத்தப்படும் எனக் கிடைத்த தகவல் போலியென கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் போலித் தகவலை அவசர தொலைபேசியூடாக வழங்கியதாக கூறப்படும் கண்டியைச் சேர்ந்த சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவ்வாறான போலியான தகவல்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்கவேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## உருக்குலைந்த நிலையில் முதியவரின் சடலம் மீட்பு!

நெடுந்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முதியவரின் சடலமொன்று தூக்கிலிருந்து உருக்குலைந்த நிலையில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவு 12ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா ராசேந்திரன் (வயது-64) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் மாவட்ட மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை நெடுந்தீவு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-14,125)

### வடக்கு - ...

தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் மற்றும் யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு என்பன தெரிவித்துள்ளன.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராகவும், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் ஆக்கிரமிப்பைக் கண்டித்தும் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு தமது பூரண ஆதரவை வழங்கும்' என்று அதன் இயக்குநர் அருட்பணி ச.வி.ப. மங்களராஜா தெரிவித்துள்ளார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் இலங்கைக்கு மட்டுமல்ல எந்தவொரு நாட்டுக்கும் பொருந்தாது. அதனை முற்றாக எதிர்க்கவேண்டும். நாம் இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவை வழங்குகின்றோம்' என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

'மக்களினுடைய சுதந்திரத்துக்கும் உரிமைக்கும் பாதகமான விடயங்களுக்கு எதிராகக் குரல் கொடுக்கப்படவேண்டும். ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவளிக்கின்றேன்' என்று திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்டியன் நோயல் இமானுவேல் தெரிவித்தார்.

'அமைதியான சூழல் நிலவுவதற்காக நாங்கள் எப்பொழுதும் போராடிக்கொண்டே இருப்போம். இவ்வாறான சட்டங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டும். ஹர்த்தாலுக்கு முழுமையான ஆதரவை வழங்குகின்றேன்' என்று மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் ஜோசப் பொன்னையா தெரிவித்தார்.

'பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை ஒட்டுமொத்த தமிழ் பேசும் மக்கள் அதேபோல சகோதர மொழி பேசுகின்ற மக்கள் முனைப்போடு இதனை எதிர்க்க வேண்டும் என்பது என்னுடைய ஆணித்தரமான கருத்து. இம்முறை அனைத்துக் கட்சிகளும் ஒரே கண்ணோட்டத்தில் ஒரே தளத்தில் நின்று ஹர்தாலுக்கு அழைப்பு விடுத்ததை நான் பாராட்டுகின்றேன். இதில் எந்தவித வேறுபாடுகளுமற்று அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் அனைத்துத் தரப்பினரும் ஹர்த்தாலுக்கு ஆதரவு கொடுக்க வேண்டும்' என்று தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன் தெரிவித்தார். (அ-ஒ,5,14,125)

### மாணவர்...

நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படும் ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்குவதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், கிழக்கு பல்கலைக்கழக கலை,கலாசார பீட மாணவர் ஒன்றியம், இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஆகியன தெரிவித்துள்ளன. 'ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவு உண்டு. இதனை முன்னெடுக்கின்ற அரசியல்வாதிகள் வெறுமனே கதவடைப்புடன் மாத்திரம் தமது எதிர்ப்புக்களை சுருக்கிவிடாது தொடர்ச்சியாக மக்கள் மயப்படுத்திய போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும்' என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் அழகராசா விஜயகுமார் தெரிவித்தார்.

'தமிழர்களின் இருப்பை நசுக்கவும் போராட்டச் சிந்தனையை முற்றாக இல்லாது செய்யவும் 30 வருடங்களாக நடைமுறையிலிருந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ஜனநாயகத்தை மீறியவகையில் பலவாறாக எம்மைப் பாதித்தது. இதனை நிறுத்துவதை விடுத்து இதற்கு மேலாக நடைமுறைக்கு வரவிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அரச இயந்திரத்தின் சதிச்செயலாகும். இதற்கும் எதிர்ப்புத் தெரிவித்து முன்னெடுக்கப்படும் வடக்கு மற்றும் கிழக்கு தழுவிய ஹர்த்தாலுக்கு எமது பூரண ஆதரவை வழங்குகின்றோம்' என்று யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் சில்வெஸ்டார் ஜெல்சின் தெரிவித்தார்.

'தொடர்ச்சியாக எமது மாணவர் சமூகத்தை நசுக்குகின்ற ஒரு சட்டமான இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் எத்தனை உருமாறி வந்தாலும் அது ஆபத்தானதே. நாளைமறுதினம் முன்னெடுக்கப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களாகிய எமது பூரண ஆதரவு உள்ளது' என்று கிழக்கு பல்கலைக்கழக கலை,கலாசார பீட மாண்வர் ஒன்றிய உப தலைவர் தெரிவித்தார்.

'தெற்கிலே நாளை 24ஆம் திகதி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் மாபெரும் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. இந்நிலையில் வடக்கு - கிழக்கில் இவ்வாறான பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்த பூரண ஹர்த்தாலுக்கும் நாம் ஆதரவளிக்கின்றோம்' என்று இலங்கை திறந்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிட்டுள்ளது. (அ-ஒ.5,125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம்

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 12 தினங்கள் நடைபெற வுள்ள மஹோற் சவத்தில் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பறத்திருவிழாவும் மே மாதம் 4ஆம் திகதி வியாழக்கிழமை தேர்த்திருவிழாவும் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளது என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (14)

## மணமகள் தேவை

04.10.1983[rd] பிறந்த கிரக பாவம் 65 1/4 உடைய பூரம் 3[rd] பாதம் உடைய சைவ போசனமுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 899 4626

## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15.11.1932 | 22.04.2023 |

### கணபதிப்பிள்ளை செங்கமலம்

உசனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை செங்கமலம் நேற்று (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருவம்பலம் -கன்னாத்த தம்பதியின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி -செல்லாச்சி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற கணபதிப் பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தெய்வானைப் பிள்ளையின் அருமைச்சகோதரியும் காலஞ்சென்ற கமலாம்பிகை, விமலாம்பிகை (லண்டன்), சிவப்பிரகாசம் (ஓய்வுநிலை ஆசிரியர்), சிவசுப்பிரமணியம் (ஓய்வுநிலை முகாமையாளர் - ஆ.வா.அபிவிருத்திநிலையம் -வரணி ), காலஞ்சென்ற சிவானந்தசோதி (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும் காலஞ்சென்ற அரியரட்னம் மற்றும் சிவராஜா (லண்டன்) , அகிலசாந்தினி, பேரின்பநாயகி (ஓய்வுநிலை ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமியாரும் பார்த்தீபன் (லண்டன்), கலையரசி, கபில்ராஜ், கார்த்திகா, மதுசன்-ஜனோசா, சுரேன் -ரம்மியா, சாரங்கா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யாதவியின் அன்பு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெற்று உசன் ஈச்சக்காட்டு இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

0772242006

தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### திருமதி இராசையா பரமேஸ்வரி

தோற்றம்: 23.08.1933 மறைவு: 22.04.2023

நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா பரமேஸ்வரி அவர்கள் நேற்று (22.04.2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்பு மனைவியும், அமரர் தர்மசந்திரன் மற்றும் தேவமனோகரியின் அன்புத் தாயாரும், அமரர் சற்குணராஜாவின் மாமியாரும், அமரர் ஜீவரத்தினம், அமரர் இன்பநாதன் மற்றும் சத்தியசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமரர் அப்புதுரை, அமரர் கந்தையா மற்றும் பூமாதேவி, கலாயினி, புஸ்பவதி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று குச்சப்பிட்டி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

கடந்த (04.05.2022) சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் தனுஸ்கோடி குணரத்தினம்

(முன்னாள் ஓய்வுபெற்ற மாநகரசபை கணக்காய்வாளர்)



அவர்களின் முதலாம் ஆண்டு நினைவலைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

தோற்றம்
03.09.1934

மறைவு
04.05.2022

நீங்காத நினைவுகள் தந்து
நீண்டதூரம் சென்று
ஆண்டு ஒன்று கடந்தாலும்
ஓயவில்லை உங்கள் நினைவுகள்
பார்த்த விழிகள் தேடுகின்றன
ஆறாது உங்கள் நினைவுகள்
அழியாது உங்கள் புன்னகை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திங்கின்றோம்.

இல. 113, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### கதிரவேலு நல்லையா



பிறப்பு 15.01.1929

இறப்பு 22.04.2023

தச்சன்தோப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு நல்லையா நேற்று (22.04.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2023) முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிண முருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ICS 24578(A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










# காயத்ரி மந்திர வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப். 23

சர்வலோக சுபீட்சத்துக்கான காயத்ரி மஹா மந்திர மஹா யக்ஞம் வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை நல்லூர் சிவன் கோயிலில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (ம-14)

# வவுனியாவில் எல்லை நிர்ணயம் மக்கள் கருத்துகள் சேகரிப்பு

வவுனியா, ஏப். 23

வவுனியா வடக்கு பிரதேசசபையின் புதிய வட்டாரங்களின் எல்லை நிர்ணயம் தொடர்பில் கருத்துகளை முன்வைக்குமாறு வவுனியா வடக்கு பிரதேசசபை கோரியுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேசசபையின் புதிய வட்டாரங்களின் வரைவு அறிக்கையை எல்லை நிர்ணயக் குழு வெளியிட்டுள்ளது. இந்த விவரங்களை வவுனியா வடக்கு பிரதேசசபை நெடுங்கேணி அலுவலகத்திலும், கனகராயன்குளம் பகுதியில் உள்ள உப அலுவலகத்திலும், நெடுங்கேணி நூலகத்திலும், நைனாமடு உப அலுவலகத்திலும் பார்வையிட முடியும். இதில் குறைபாடுகள் இருந்தால் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை மக்கள் முன்வைக்கலாம்.

கருத்துக்களை தேசிய எல்லை நிர்ணயக் குழு, அளவையாளர் நாயக அலுவலகக் கட்டடம், கிருள வீதி, கொழும்பு - 5 எனும் முகவரிக்கும் அனுப்பி வைக்கவேண்டும். அதன் பிரதிகளை மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், வவுனியா மற்றும் செயலாளர், வவுனியா வடக்கு பிரதேசசபை, நெடுங்கேணி ஆகிய முகவரிகளுக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பி வைக்க வேண்டும் என வவுனியா வடக்கு பிரதேசசபை செயலாளர் அறிவித்துள்ளார். (சு-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரங்குகளின் ஏற்றுமதி சூழல் விரோதமானது

## ஐங்கரநேசன் சாடல்



யாழ்ப்பாணம், ஏப். 23

**குரங்குகளை சீனாவுக்கு அனுப்பும் தீர்மானமானது குருட்டுத்தனமானதும் சூழல் விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததும் ஆகும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் உள்ளதாவது,

அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்று சீனத் தூதுவராலயம் தெரிவித்திருக்கிறது. ஆனால், சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும் குரங்குகள் உட்பட அழிந்து வரும் பல காட்டுயிரிகளின் மிகப்பெரும் கறுப்புச்சந்தையாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது. சீன உணவகங்களில் குரங்கிறைச்சி அதிவிருப்பத்துக்குரிய தெரிவு என்பதாலும் ஆய்வகங்களில் குரங்குகள் சோதனை விலங்குகளாக அதிகம் தேவைப்படுவதாலும் சீனாவில் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவுகிறது. இதனை ஈடுகட்டவே, ஜீவகாருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்ப மிருகக்காட்சிச் சாலைகளுக்கென்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்துக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டு வரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின்நோக்கிச் சுடுவது போன்ற பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடுகை செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் கருதப்படும் குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும். செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது.

சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்த நிலையில் எதையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.

கூடவே, குரங்குகளால் விவசாயத் துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் - என்றுள்ளது. (ஓ-14)



## மரநடுகை

வவுனியா, ஏப். 23

தமிழ் - சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு விவசாய அமைச்சால் "பழம் தரும் பல்லாண்டுப்பயிரை பயிரிடுவோம்" எனும் தொனிப்பொருளின் கீழ் தேசிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்ற மரநடுகைத் திட்டம், வவுனியா உலுக்குளம் கமநலசேவைத் திணைக்களத்துக்குட்பட்ட ரங்கீத்கம எனும் கிராமத்தில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான காதர் மஸ்தான் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில், தெரிவு செய்யப்பட்ட 200 பயனாளிகளுக்கு பல்லாண்டுப் பயிர்கள் வழங்கப்பட்டன. (ஓ-14)



## மரக்கன்று வழங்கல்

சாவகச்சேரி, ஏப். 23

தற்சார்புப் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக பயன்தரு மரக்கன்றுகள் வழங்கும் திட்டம், கொடிகாமம் வடக்கு கிராமஅலுவலர் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. நமது உழைப்பு அமைப்பின் அனுசரணையில் சாவகச்சேரி பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், கொடிகாமம் வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளருமான வை.ஜெகதாஸின் ஒழுங்கமைப்பில் ஜே/326 கிராமஅலுவலர் பிரிவுக்குட்பட்ட 100 பயனாளிகளுக்கு 400 வரையான பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஓ-14-66)



## விழிப்புணர்வும் சைக்கிள்பவனியும்

சாவகச்சேரி, ஏப். 23

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தின் ஏற்பாட்டில், சுகாதார அமைச்சின் உடல் அசைவு பௌதீக செயற்பாட்டு மாத நிகழ்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு "தொற்றா நோய்களுக்கு எதிராகப் போராடுவோம்" என்ற தலைப்பில் விழிப்புணர்வும் சைக்கிள் பவனியும் சாவகச்சேரியில் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்றிலில் ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாக சாவகச்சேரி பேருந்து நிலையம் வரை விழிப்புணர்வுப் பவனி இடம்பெற்றது.

விழிப்புணர்வில் சுகாதாரத்திணைக்களத்துடன் இணைந்து தென்மராட்சி பிரதேசசெயலகம் மற்றும் கல்வி வலயத்தைச் சேர்ந்த அலுவலர்கள், மாணவர்கள், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (ஓ-14-9)

## தென்மராட்சியில் களப்பரிசோதனை

சாவகச்சேரி, ஏப். 23

தென்மராட்சிப் பகுதியில் தென்மராட்சி பிரதேசசெயலக சமூகப்பணிக் குழுக்களால் களப் பரிசோதனைகள் கடந்த புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

நாவற்குழி மேற்கு ஜே/294 கிராம அலுவலர் பிரிவில் ஐயனார் கோயிலடி, புதிய குடியேற்றத் திட்டம், 5 வீட்டுத்திட்டம் போன்ற இடங்களில் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

களப்பணியில் கிராமஅலுவலர், பிரதேசசபை, வலயக்கல்விப் பணிமனை, சுகாதார மருத்துவ அதிகாரி பணியகம் உள்ளிட்ட பல திணைக்களங்கள் கலந்து கொண்டு ஒவ்வொரு பிரிவு உத்தியோகத்தர்களுக்கும் கிராமங்களில் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பான வேலைத்திட்டங்கள் தொடர்பான தேவைப்பாடுகளை ஆராய்ந்து அவற்றைத் தீர்ப்பதற்கான ஆலோசனைகளை வழங்கினர். (ஓ-14-9)

## அரிசி விலையில் சமரசம் இல்லை!

கொழும்பு, ஏப். 23

பொது மக்களுக்கு அரிசியின் விலையில் சலுகைகளை வழங்க முடியாது என இலங்கையின் முன்னணி அரிசி வர்த்தகர் டட்லி சிறிசேன தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சமையல் நிபுணர்கள் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட புத்தாண்டு நிகழ்வுகளில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

எரிபொருள் விலை உயர்வு, அதிக வரி உள்ளிட்ட பல காரணங்களால் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இதனால், அரிசி விலையில் சலுகைகளை வழங்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-இ)



சாவகச்சேரி தனங்களப்பு அ.த.க. பாடசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட நுழைவாயில், பாடசாலை அதிபர் க.உமாபாலன் தலைமையில் கடந்த புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது. (ஓ-14-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## தவிர்க்கவேண்டிய தனி ஆவர்த்தனம்

தமிழ் இனத்தின் இருப்பைக் கேள்விக்குறியாக்கும் வகையிலும், சுயநிர்ணய உரிமையை நீர்த்துப்போகச் செய்யும் வகையிலும் தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்பு, சிங்களக் குடியேற்றங்கள் மூலம் குடிப்பரம்பலைச் சிதைக்கும் செயற்பாடு; தொன்மையை நிரூபிக்கும் சான்றுகளை அழித்தல், சைவ ஆலயங்களை இடித்தழித்தல், அங்கு பௌத்த கட்டுமானங்களை வலிந்து ஏற்படுத்தல் உள்ளிட்ட செயற்பாடுகளை எதிர்த்தும் அரசியல் கட்சிகள், மத அமைப்புக்கள், பொதுக்கட்டமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் தமிழ்த் தேசியப் பற்றாளர்கள் ஒன்றிணைந்து எதிர்வரும் 25 ஆம் திகதி கடையடைப்புப் போராட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளனர். ஒருநாள் கடையடைப்பை நடத்துவதால் மட்டும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைத்து விடப்போவதில்லை என்பது எல்லோருக்குமே தெரிந்ததுதான். ஏனெனில் இதுபோன்று ஏராளம் கடையடைப்புகளை கடந்து வந்தவர்கள் நாம். அந்தக் கடையடைப்புகளால் எந்தவித மாற்றங்களும் நிகழ்ந்துவிடவில்லை. அதேபோலதான் இந்தக் கடையடைப்பும் பத்தோடு பதினொன்றாக – 25 ஆம் திகதி மட்டும் தாயகத்தின் இயல்பு வாழ்வு முடங்குவதோடு– முற்றுப்பெற்றுவிடும். எனினும் எமது எதிர்ப்பை பதிவு செய்யும் ஓர் அடையாளமாக – எமது இருப்பைத் தக்க வைக்க முயற்சி செய்தோம் என்ற செய்தியை – அழுத்தமாகப் பதிவுசெய்ய இந்தக் கடையடைப்பு சர்வதேசத்தின் கவனக்குவிப்பைக் கோருமென்பதிலும் சந்தேகமில்லை. எப்போதுமே ஆதரவின் வீரியத்தைப் பொறுத்தே எமது எதிர்ப்பின் பெறுமதியை சர்வதேசம் போன்ற மூன்றாம் தரப்புகள் கணித்துக் கொள்கின்றன. எனவே இந்தக் கடையடைப்புக்கு தமிழ் மக்கள் அனைவரும் கட்சி, மத பேதமின்றி ஆதரவு கொடுக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

ஆனால் இப்படி எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து தமிழினம் மீதான ஒடுக்குமுறைக்கெதிராகத் திரளும் சந்தர்ப்பத்தில் – எதிர்ப்பைக் காட்டுவதிலாவது ஒற்றுமை என்ற வெண்ணெய் திரண்டுவருகையில் – வழக்கம் போன்று 'குறுக்கால் ஓடி' தாழியை உடைக்கும் கைங்கரியத்தைச் செவ்வனே செய்ய முனைகின்றது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி. 'எமது பிரச்சினைகளைத் தீர்க்கவென புதுப்புது அமைப்புகளை உருவாக்குகின்றனர். அந்த அமைப்புகள் ஒற்றையாட்சிக்குட்படும் 13 ஆவது திருத்தச்சட்டத்தை ஆதரிக்கின்றன. இந்த அமைப்புகள் மக்களை ஏமாற்றுகின்றன' என்னும் காரணங்களை முன்வைத்தே தமது கட்சி கடையடைப்புக்கு ஆதரவு வழங்கவில்லை என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறியிருக்கிறார். இத்தனைக்கும் அவர் எந்த ஒற்றையாட்சியை எதிர்க்கிறாரோ அதே ஒற்றையாட்சியை ஏற்கும் அரசமைப்பினை ஏற்று சத்தியப்பிரமாணம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர். அவரும், அவரது கட்சியும் இதயபூர்வமாக ஒற்றையாட்சியையும், அதை நடைமுறைப்படுத்தும் அரசமைப்பினையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால், வாக்கரசியலுக்கு வந்திருக்கவே கூடாது. மக்களுக்கான செயற்பாட்டு அரசியலை மட்டுமே அவர்கள் முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் முன்னணி 13 ஆம் திருத்தச் சட்டத்துக்குட்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டதோடு, அடுத்து மாகாணசபைத் தேர்தல் பந்தயத்திலும் கலந்துகொள்ளத் தயாராகிக் கொண்டிருக்கிறது. தேர்தலில் மட்டும் 13 ஆம் திருத்தச் சட்டத்தையே வசதியாகமறந்துவிடுகின்ற முன்னணிக்கு, மக்கள்பிரச்சினைக்கு போராடும் போதுதான் அது ஒற்றையாட்சிக்கு வழிவகுக்கும் சட்டத் திருத்தம் என்பது நினைவுக்கு வருகின்றது போலும்.

எப்போதெல்லாம் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்காக தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் தமக்கிடையேயான பேதங்களை மறந்து கைகோர்க்க நினைக்கின்றனவோ அப்போதெல்லாம் இதேபோன்று காரியத்தைக் கெடுக்கும் விதமாக, தனி ஆவர்த்தனம் வாசிப்பது முன்னணிக்குப் பழக்கப்பட்டுப் போன விடயமே. ஒருகாலத்தில் 'கொள்கைக்குன்றாக' இருந்த முன்னணி பின்னர் 'குழப்பக்குன்றாக' மாறி, மற்றைய கட்சிகள் ஆதரிக்கும் எந்தவிடயத்தையும் கண்ணைமூடிக்கொண்டு எதிர்ப்பது என்ற ஒற்றைநிலைப்பாட்டிலேயே இயங்கிவருகின்றது. தமது கட்சியினர் மட்டுமே பத்தரை மாற்றுத் தங்கமென்றும் மற்றைய கட்சிகளெல்லாம் மக்களுக்குத் துரோகம் செய்கின்றன என்பதும் முன்னணியின் தாரகமந்திரமாக மாறிவிட்டது. அதிகார எதிர்ப்பரசியல் என்ற நிலையை முன்னணி 'சககட்சிகள் மீதான எதிர்ப்பு' என்பதாக நிலைமாற்றம் செய்துவிட்டது. அதனாலேயே முன்னொரு காலத்தில் – ஏனைய கட்சிகளே களத்தில் இறங்கப் பயந்திருந்த காலத்தில் – மக்களுக்கு தூசு பட்டால் கூட, துணிந்து நின்று குரல்கொடுத்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இப்போது சுயநல அரசியல் என்னும் படுகுழிக்குள் வீழ்ந்துள்ளது. இந்தச் சுயநல அரசியல் பாதை தமிழினத்துக்கும் நல்லதல்ல, முன்னணிக்கும் நல்லதல்ல!

### நாளொரு நல்வார்த்தை

"வாழ்க்கை என்பது சைக்கிள் ஓட்டுவது போன்றது. உங்கள் சமநிலையை நிலைநிறுத்த, நீங்கள் தொடர்ந்து செல்லவேண்டும்"

– அல்பேர்ட் ஐன்ஸ்டீன்




# மன்னார் நகரசபையை உடன் தரமுயர்த்துக!

## உள்ளூராட்சி அமைச்சுக்கு ஜனாதிபதி அலுவலகம் கடிதம்

**மன்னார், ஏப். 23**

**மன்னார் நகரசபையை தரம் உயர்த்துவது தொடர்பாக சட்டக் கட்டமைப்புக்குள் தேவையான நடவடிக்கையை எடுக்கும்படி உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி அலுவலகம் கடிதம் அனுப்பியுள்ளது.**

மன்னார் நகரசபையை மாநகரசபையாக தரம் உயர்த்துவதற்கு அமைச்சரவையிலிருந்து அனுமதி பெறப்பட்டிருக்கின்றபோதும் இதுவரை இதுதொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை எனத் தெரிவித்து வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார்.

அதனையடுத்து இது தொடர்பில் ஜனாதிபதி அலுவலகம் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு மன்னார் நகரசபையை தரமுயர்த்த நடவடிக்கை எடுக்கும்படி தெரிவித்து கடிதம் அனுப்பியுள்ளது. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மன்னார் நகரசபையை தரம் உயர்த்துவது தொடர்பாக சட்டக் கட்டமைப்புக்குள் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பாக நடைமுறைப்படுத்த வேண்டிய செயன்முறைகள் தொடர்பாக எமக்கு அறியத்தர வேண்டும் என்றுள்ளது.

கடிதத்தின் பிரதி வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

(ம-14,60)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு ஜி.எஸ்.பி. சலுகையைப் பாதிக்கும்

## 3 நாடுகள் தெளிவுபடுத்தல்

கொழும்பு. ஏப்.23

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவில் இலங்கை அரசாங்கம் மாற்றங்களை மேற்கொள்ளாதுவிடின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இழக்கும் ஆபத்து உருவாகும் என்று ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் தங்கள் இராஜதந்திர வட்டாரங்கள் மூலம் தெரியப்படுத்தியுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இலங்கையின் வெளிவிவகார அமைச்சுக்கு ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் "பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து தமது கவலையை வெளியிட்டு, இது ஜி.எஸ்.பி.சலுகை தொடர்பான விடயங்களில் தாக்கம் ஏற்படுத்தும்" என்று சுட்டிக்காட்டியுள்ளனர். அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க மூலமாக அமெரிக்க அரசாங்கம், "இந்தப் புதிய சட்டவரைவிலுள்ள அம்சங்கள் அதிருப்தியை ஏற்படுத்துகின்றன" எனத் தெரியப்படுத்தியுள்ளது. என்று அந்த ஊடகங்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ச-இ)

நாளை 24.04.2023 திங்கட்கிழமை சித்திரை 11

சுபநேரம் : 12.00 - 01.30

ராகுகாலம் : 07.30 - 09.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 10 . 1942



இறப்பு 21 . 04 . 2023

## அருணாசலம் சிவநாதன்

(உரிமையாளர் - ஸ்ரீ ஸ்கந்த பவனம் அரிசி ஆலை,
அகில இலங்கை சமாதான நீதவான்)

சின்னப்புதுக்குளம், வவுனியாவைப் பிறப்பிடமாகவும், சின்னப்புதுக்குளம், நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் சிவநாதன் (உரிமையாளர் - ஸ்ரீ ஸ்கந்த பவனம் அரிசி ஆலை, அகில இலங்கை சமாதான நீதவான்) நேற்றுமுன்தினம் (21.04.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், அருண்மொழி (HNB - Vavuniya), அரவிந்தன் (Manager, HSBC - Jaffna), அம்பிகை (Canada), ஆரூரான் (Business Analyst - Vancouver), ஆர்த்திகா ( Management Assistant - ATI, Jaffna ) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயகுமார் (அதிபர், கூமாங்குளம், சித்தி விநாயகர் வித்தியாலயம்), கலாநிதி சுகன்யா (சிரேஷ்ட விரிவுரையாளர் - யாழ். பல்கலைக்கழகம்), சிவநேசன் ( Canada ), துவாரகா ( Social Security Councilor - Vancouver), வேதகிரீஸ்வரன் (ATI, Jaffna) ஆகியோரின் மாமனாரும், கங்கேஷ்வர் ( IIT - Colombo), புருஷோத்தமன் (வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்), கிருஷிகா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலம்), ஆதித்யா + சஹானா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அபராஜிதன் (யாழ். இந்துக் கல்லூரி), ஹம்சத்வனி + யர்ஷன் + ஹம்சிகா + யர்ஷிகா (Canada), அதீனா + ஆதீஷ் (Vancouver) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.04.2023) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் இல.64, அரச வீதி, நல்லூரில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு நாளை (24.04.2023) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**மகன்மார் - அரவிந்தன் (0777 589 728), ஆரூரான்**
**மகள்மார் - அருண்மொழி (0777 571 955),**
**அம்பிகை, ஆர்த்திகா (0766 859 723)**

(CS/50140)AH-1

# காணி விற்பனைக்கு

அரியாலை மணியந்தோட்டம், ஆங்கில பாடசாலைக்குப் பின்பக்கமாக 50 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. யாழ். நகரிலிருந்து 7Km தூரம். (2 பரப்பாக பிரித்துக்கொடுக்கப்படும்

அரியாலை உதயபுரம் முடிவில் கடற்கரையிலிருந்து இரண்டாவது காணி 4 1/2 பரப்பு விற்பனைக்கு உண்டு.

(CS 23699)(3/6) **தொடர்பு: 077 423 5458**

# காணி விற்பனைக்கு

தாவடி 192ம் இலக்க கிராமசேவையாளர் அலுவலகத்திற்கு அருகாமையில் 100m தூரத்தில் இரண்டு, இரண்டு பரப்புகளாக பிரிக்கப்பட்ட இரண்டு காணித்துண்டுகள் உள்ளது. கொள்முதல் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும். யாழ். நகரில் இருந்து 3km மற்றும் K.K.S வீதியிலிருந்து 500m தூரத்தில் அமைந்துள்ளது. 1 பரப்பின் விலை- ரூபா 60 லட்சம்.

**077 00 222 51, 076 76 98 300**

## நிர்வாகத்தெரிவு

தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் பிரதேச அபிவிருத்தி அலுவலரால் கிராமஅலுவலர் பிரிவு ரீதியாக சகவாழ்வுச் சங்க நிர்வாகத் தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கமைய மட்டுவில், நுணாவில், கைதடி தெற்கு ஆகிய பிரிவுகளில் சகவாழ்வுச் சங்க நடப்பு வருட நிர்வாகத் தெரிவுகள் அண்மையில் இடம்பெற்றன.

(ம-14,9)

## தேவை

**யாழ்ப்பாணம் புங்குடுதீவு**
**கண்ணகை அம்பாள் என வழங்கும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்திற்கு கீழ் கண்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு தகுதியானோர் தேவை.**

- **மேற்பார்வையாளர்கள்**
  - குறிப்பிட்ட துறையில் 05 வருட அனுபவம் இருத்தல் அவசியம். மேலும் தங்கியிருந்து வேலை செய்வோர் விரும்பத்தக்கது.
- **கணக்கு உதவியாளர்**
  - 02 வருட அனுபவத்துடன் கூடிய கணினி அறிவு இருத்தல் அவசியம்
- **பூசகர் மற்றும் குருக்கள்**
  - நித்திய பூஜைகளை மேற்கொள்வதற்கு தங்கியிருந்து வேலை செய்யும் குருக்கள் மற்றும் பூசகர் தேவை.
- **சமையற்காரர்கள்**
  - ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு இந்திய பாணியில் சமைக்க கூடிய நன்கு அனுபவமுள்ளோர் தேவை.
- **தங்குமிட வசதி செய்து தரப்படும்.**

**தொடர்பு: 077 788 7830**
**10 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.** நிர்வாகசபை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 25 . 11 . 1935



உதிர்வு 04 . 05 . 2022

## அமரர் புஸ்பவதி வயித்திலிங்கம்

ஆண்டொன்று ஆன்போதும்
ஆறவில்லை எம் மனது
அம்மா உங்கள் தாலாட்டிலே
உங்கள் மடியில் தூங்கினோம்

உங்கள் சிறப்பான அன்பின்
வழி நடத்தலினாலே அகிலமெங்கும்
தலை நிமிர்ந்தோம்
உங்கள் புன்னகை பூத்த முகம்
என்றும் மறையவில்லை எமைவிட்டு
ஆறாத துயரம் தான் எப்போதும் இது எமக்கு

**தெய்வமாகிவிட்ட எங்கள் அன்பு அம்மாவின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**34, புலவானார் வீதி,**
**கல்வியங்காடு,**
**யாழ்ப்பாணம்.**

(CS/50129) AH-1 **குடும்பத்தினர்.**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 08 . 1945



மறைவு 04 . 05 . 2022

கடந்த (04.05.2022) புதன்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

## அமரர் நாகமுத்து இரத்தினசிங்கம்

### திதி: வளர்பிறை சதுர்த்தி

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப் பிரிந்து
ஆண்டு ஒன்று மறைந்ததையா
எம் உள்ளங்களில் என்றும் நிலைத்திருக்கின்றீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சுழிபுரம் மேற்கு,**
**சுழிபுரம்.**

**உங்கள் பிரிவால் துயருறும்**
(cs.50130) (N-1) **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## அல்லமாபிரபு சதானந்தன்



தோற்றம் 22.10.1943 மறைவு 20.04.2023

யாழ். இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், சிறுவிளானை வசிப்பிடமாகவும், அவுஸ்திரேலியா Sydney ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட அல்லமாபிரபு சதானந்தன் கடந்த (20-04-2023) வியாழக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அல்லமாபிரபு பாக்கியம் தம்பதிகளின் இளைய மகனும், காலஞ்சென்ற பாலசுப்பிர மணியம் சகுந்தலாதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசீலா அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வர்களான இரத்தினம், பரமசாமி, ஈஸ்வரி மற்றும் நித்தியானந்தன் ஆகியோரின் ஆருயிர்இளைய சகோதரரும், கபிலன் (இலங்கை), சகிலன் (அவுஸ்திரேலியா), அகிலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கஸ்தூரி, கோபிகா, கிருபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மிதுர்சி, யதுசி, ரிஷிகரன், வருண், திசானி, மஞ்சரி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24-04-2023) திங்கட்கிழமை அவுஸ்திரேலியாவில் இடம்பெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**கபிலன்**
**(மகன்-077 844 4843**
**சிவகுமார்**
**(மைத்துனர் -077 379 2318**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(cs 50127) (N-1)

# மரண அறிவித்தல்

## செல்லையா கோபாலரத்தினம் (கோபால்)



தோற்றம் 20.11.1951 மறைவு 20.04.2023

புத்தூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா கோபாலரத்தினம் கடந்த (20.04.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான வேலுப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதிகளின் பாசமிகு மருமகனும், இந்திராதேவியின் ஆருயிர்க் கணவரும், காலஞ்சென்ற சுஜீவன் மற்றும் பிரதீசன், சஜீவன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷா, சங்கவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், தைஸ்னி, தைஷான், திஷாரா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற வர்களான சதாசிவம், சின்னமணி, சதீஷ்குமார் மற்றும் பாலசுப்பிரமணியம், தவமணி, நடராசா, இராசேந்திரம், தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், விமலராணி, புஸ்பலலிதா, வேலாயுதப்பிள்ளை, தயாநிதி, கேதீஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரரும், இரஞ்சிதம், இரத்தினம், சிவஞானம், லலிதநாயகி, சசிகலா, இராஜினி, பாலசுப்பிரமணியம், தங்கவேல், குலமணிதேவி, சிவனேஸ்வரன், ஞானதீபம் ஆகியோரின் பாசமிகு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.04.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிந்திட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/24554)AH-1

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடனம் தொடர்பான இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறி**
**மற்றும்**
**சங்கீதம் தொடர்பான இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறி**
**2023 / 2024 கல்வி வருடத்திற்காக மாணவர்களை உள்வாங்குதல்**

டவர் மண்டப அரங்க மன்றம் ஊடாக தமிழ் மொழி மூலம் நடனம் தொடர்பான இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறி மற்றும் சங்கீதம் தொடர்பான இரு வருட முழு நேர உயர் டிப்ளோமா பாடநெறி 2023/2024 கல்வி வருடத்திற்காக மாணவர்களை உள்வாங்குதல்.

இந்த இருவருட முழு நேர டிப்ளோமா (SLQF 3 மற்றும் 4) முடித்த மாணவர்கள் (SLQF 5 மற்றும் 6) கற்பதற்கான தகுதியுடையவர்களாவர்.

**நடன உயர் டிப்ளோமா பாடநெறிக்கான தகைமைகள்**
- க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரு தடவைகளுக்கு மேற்படாதவாறு நடனம் ,கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இப் பெறுபேறுகள் அனைத்தும் ஒரே பத்திரத்தில் இருக்க வேண்டும்)
- க.பொ.த (உ.த) பரீட்சையயில் ஒரே அமர்வில் நடனம் உட்பட (03) பாடங்களிலும் சித்தியடைந் திருத்தல் வேண்டும்.

**சங்கீத உயர் டிப்ளோமா பாடநெறிக்கான தகைமைகள்**
- க.பொ.த (சா.த) பரீட்சையில் ஒரு தடவைகளுக்கு மேற்படாதவாறு சங்கீதம் ,கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். (இப் பெறுபேறுகள் அனைத்தும் ஒரே பத்திரத்தில் இருக்க வேண்டும்)
- க.பொ.த (உ.த) பரீட்சையயில் ஒரே அமர்வில் சங்கீதம் உட்பட(03) பாடங்களிலும் சித்தியடைந்தி ருத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தாரர்கள் அனைவரும் 2023.06.09 அன்று 18 வயதுக்கு குறையாமலும் 23 வய துக்கு மேற்படாதவராாகவும் இருக்க வேண்டும். ஆண். பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

**ஆட்சேர்ப்பு முறை**
- விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரிகளின் கல்விப் பெறுபேறுகளின் அடிப்படையில் 100 விண்ணப்பத்தாரர்கள தெரிவு செய்யப்பட்டு நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். டவர் மண்டப அரங்க மன்றத்தினால் நடாத்தப்படும் நேர்முகத்தேர்வின் மூலம் புள்ளிகளின் அடிப் படையில் சிறந்த தகுதியான 60 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

**பாடநெறிக்கட்டணம்**

சங்கீத மற்றும் நடன உயர் டிப்ளோமா (2வருடம்) க்கான முழுத்தொகை 130000.00 ஆகும். தவணைகள் மூலம் பணம் செலுத்தலாம்.

**விண்ணப்பப்படிவம் சம்பந்தமான தகவல்களை எமது இனையத்தளத்தில் பார்வையிடலாம்** www.towerhall.lk/si

விண்ணப்பக் கட்டணமாக 2000.00 விண்ணப்பத்தாரியின் ஊடாக - **ஹயிற்பார்க்** (Bank of Ceylon - Hyde Park) **இலங்கை வங்கிக் கிளைக் கணக்கு இலக்கம்** 2327541, **டவர் மண்டப அரங்க மன்றம்** - என்னும் பெயருக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பக் கட்டணம் செலுத்தி யமைக்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்ட இடத்தில் இணைத்து அனுப்ப வேண்டும்.அனைத்து விண்ணப்பப் படிவங்களும் யூன் மாதம் 09 ஆம் திகதிக்கு முன்பாக பதிவுத்தபாலில் **பணிப்பாளர் நாயகம், டவர் மண்டப அரங்க மன்றம், சவ்சிறிபாய,** 123, **விஜேராம மாவத்தை கொழும்பு - 07** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப் பட வேண்டும். இது தொடர்பான மேலதிக தகவல்களுக்கு **தொ.பே.இல** - 0112687134, 0778432405 தொடர்பு கொள்ளவும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய பாடநெறியினை குறிப்பிடல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**டவர் மண்டப அரங்க மன்றம்,**
**இல: 123,சவ்சிறிபாய,**
**விஜேயராம மாவத்தை, கொழும்பு-07.**

**டவர் மண்டப அரங்க மன்றம்**
**புத்தசாசனம், சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு** (CR.39690) (2.6)






**டிக்கெட் கிடைக்கும் இடங்கள்**

MARUTHI MONEY EXCHANGE (PVT) LTD - 021 221 4433,
STAR FOOD STORE - 076 217 7785,
LAVAN'S FAMILY RESTAURANT - 076 330 3030,
KAMALESHWARY - 021 222 6171,
KIRUBAA LEARNERS - 021 222 4353,
EDIBON MIXTURE - 021 222 6292,
KIRUBAA LEARNERS - 077 474 7417 , 021 226 0700
KIRUBAA LEARNERS CHUNNAKAM - 077 723 8600,
KIRUBAA LEARNERS CHAVAKACHCHERI - 077 [illegible] 3949
SFS STAR FOOD STORE ACHCHUVELI - 077 606 3740,
ASAIPILLAI & SONS GOLD HOUSE - 077 267 0899


# பதவி வெற்றிடம்


பிரபல கட்டிடப் பொருட்கள் உற்பத்தி நிறுவனத்தில் கீழ்க்காணும் பதவி வெற்றிடத்திற்கு வடமாகாணத்தில் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**வெளிவேலை விற்பனையாளர்**

3-5 வருட அனுபவமுள்ள தன்னிச்சையாக, சுதந்திரமாக இயங்கக்கூடியவரும், வெளியே சென்று விற்பனையின் தரத்தை உயர்த்தக் கூடியவராகவும் இருத்தல் அவசியம்.

கட்டிடப் பொருட்களைப் பற்றிய அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும். சம்பளத்துடன், மேலதிக கொடுப்பனவு மற்றும் போக்குவரத்துச் செலவும் வழங்கப்படும்.

உறவினரல்லாத இருவரின் விபரங்கள் மற்றும் சான்றிதழ்களுடன் விண்ணப்பங்களை அனுப்பவும்.

39 MASCON ESTD 1939 **MASCONS (PVT) LTD.**
175, Sri Sumanatissa Mawatha, Colombo 12
E - Mail : mascons@eureka .lk , Fax : 2449537


## ஹெரோய்ன் நுகர்ந்த ஆண், பெண் கைது

யாழ், ஏப். 23

உயிர்கொல்லி ஹெரோய்ன் நுகர்ந்த 24 வயது ஆணும் 19 வயதுப் பெண்ணும் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோண்டாவிலிலுள்ள தனியார் விடுதியொன்றில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர். (ஒ-26)


**உடனடியாக பணியில் சேர்வதற்காக நேர்காணல்**

இலங்கையில் கட்டுமான துறையில் முதன்மை வகிக்கின்ற நிறுவனம் ஒன்றிற்கு கிளிநொச்சி பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற நீர்வழங்கல் திட்டத்துக்கு கிழே கொடுக்கப்பட்டுள்ள தேர்ச்சி மிக்க வேலையாட்கள் தேவைப்படுகின்றார்கள்.

1. தச்சு வேலையாட்கள்
2. மேசன்கள்
3. வேலையாட்கள்

கவர்ச்சிகரமான சம்பளம், மேலதிக நேர வேலைப்பணம் மேலும் வருகை ஒழுக்கத்திக்கான கொடுப்பனவு என்பன வழங்கப்படும்.

**உடனே அழையுங்கள்**

திரு பெரேரா : 077 352 5163
திரு குணபரன் : 077 978 0272

(cr 39686)



# தேவை

**யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் இயங்கும் நிறுவனத்திற்கு**
**பின்வரும் பணியாளர்கள் தேவை**

**காசாளர்/வரவேற்பாளர் (பெண்)**
- பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்
- 21 தொடக்கம் 30 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- Ms Office & Computer Knowledge தெரிந்திருத்தல்
- தமிழ், ஆங்கிலம் உட்பட சிங்களம் ஓரளவு தெரிந்தவராகவும் இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமைகளாகக் கொள்ளப்படும்.

**கணக்காளர் (ஆண்)**
- 35 தொடக்கம் 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்
- CIMA கற்கைநெறியை முடித்திருத்தல் வேண்டும்.
- வருமான வரி கணக்குகள் செய்து அனுபவம் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
- முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

**கணக்கு உதவியாளர் (பெண்)**
- க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- கணணி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்
- MS office கற்கைநெறி (MS Excel இல் திறமை) பூர்த்தி செய்தவரிற்கு முன் உரிமை வழுங்கப்படும்.
- வயதெல்லை 21-35 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**In designer (ஆண்/பெண்)**
- Corel Draw
- Tamil Typing

மேற்குறிப்பிட்ட தகைமைகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது **சுயவிபரக் கோவை, அடையாள அட்டை போட்டோபிரதி, சான்றிதழ்களின் போட்டோ பிரதி** ஆகியவற்றை இணைத்து **06/05/2023** இற்கு முன்னதாக கீழ் குறிப் பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இல . 1042**
**உதயன் பணிமனை,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.** (CS.50131) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

கொழும்பு கிருளப்பனையில் 4 பேர் கொண்ட வீடொன்றில் தங்கியிருந்து கையுதவி செய்வதற்கு சிங்களம் பேசக்கூடிய 55 வயதுக்குட்பட்ட பணிப்பெண் ஒருவர் தேவை.

**070 799 8732**

## காணி விற்பனைக்கு

நல்லூர், மூத்த விநாயகர் கோவில் வீதியில் 1.75 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 615 2977**

(CS/23850)AH-1

## மணமகள் தேவை

பிரான்ஸ் நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த (V) விவாகரத்து பெற்ற மணமகனுக்கு நன்கு படித்த 40 - 45 வயதுக்குட்பட்ட இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை.

திருமணம் செய்தவர்கள், திருமணம் செய்து விவாகரத்துப் பெற்ற, பிள்ளைகள் அற்ற மணமக்களும் தொடர்பு கொள்ளலாம். (வெளிநாட்டில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்)

**0033 0751 362 070**

(CS/24506)AH-1

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புரூட், ரகன் புரூட் செவிலை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புரூட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்கா, சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில்
077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## அறை வாடகைக்கு

மூளாய் வைத்தியசாலைக்கு அருகில் பெண்களுக்கான பாதுகாப்பான நவீன வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**W/app - +6598 340600**

(CS/24541)AH-1

## ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும் பரப்பு பிள்ளையார் ஆலய பரிபாலன சபை விசேட பொதுக் கூட்ட அழைப்பு

- காலம்: 30/04/2023 ஞாயிற்றுக்கிழமை
- நேரம்: மாலை 3.30 மணி
- இடம்: ஆதிமயிலிட்டி அருள்மிகு பெரும்பரப்பு பிள்ளையார் ஆலயம்

அனைவரையும் சமூகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

16-04-2023

பரிபாலன சபை
ஆதிமயிலிட்டி அருள்மிகு
பெரும்பரப்பு பிள்ளையார்
ஆலயம்.

## வீடு வாடகைக்கு

586, மானிப்பாய் வீதி, ஓட்டுமடப் பகுதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**077 12 972 09**

(CS/22849)A-1

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பலசரக்கு வணிக நிலையத்திற்கு கீழ்வரும் வேலைகளுக்கு வேலையாட்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமூகம் தரவும்.

1) பொதியிடல் (Packing) - பெண்
2) Computer Billing - ஆண், பெண்

**077 419 5015**

(CS/24545)A-1

## வீடியோ Wall லொறி விற்பனைக்கு



நல்ல நிலையிலுள்ள Fuso (இந்தியன்) 2017, நீளம் 16 1/2 Ft, 5500Km, பாவித்த 30,000cc Engine Capacity, புத்தம் புதிய Video Wall P10 உடன் 40 KVa Donyo ஜெனரேட்டர் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 15 மில்லியன் பேசித்தீர்மானிக்கலாம்

இடம் : தெஹிவளை, கொழும்பு

**தொடர்பு : 076 643 0448**

## CEYLON TAMIL MARRIAGE BUREAU SINGAPORE

We have prospective brides and bridegrooms seeking suitable partners worldwide. Those who are interested, please contact:

Tel: +65 97539583
Email:ctmbsg@gmail.com
Strictly Confidential
Business UEN No:53406709C

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
## நகர அபிவிருத்தி அதிகாரசபை
## மற்றும்
## யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
# கேள்வி அறிவித்தல்

**இல:170, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வாகன தரிப்பிடத்திற்கான மாதாந்த வாடகை அடிப்படையில் இயக்குனரைத் தேர்ந்தெடுப்பதற்கான கேள்வி கோரல்**

1. இல: 170, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தை மாதாந்த வாடகை அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு இயக்குவதற்கு பொருத்தமான இயக்குனரைத் தெரிவு செய்வதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பிராந்திய பெறுகைக்குழுத்(கீழ்மட்டம்) தலைவரினால் விலைமனுக் கோரப்படுகின்றது. வெற்றிகரமான ஏலதாரர் நகர அபிவிருத்தி அதிகாரசபை வழங்கிய அறிவுறுத்தல் மற்றும் வழிகாட்டுதல்களின்படி வாகன தரிப்பிடத்தை இயக்கி பராமரிக்க வேண்டும். அடிப்படை மாத வாடகை (ஆகக்குறைந்த) மற்றும் பிற தொடர்புடைய விடயங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

| இடம் | அடிப்படை மாத வாடகை (ரூபா) | விலை மனுப்பிணைத்தொகை (ரூபா) |
|---|---|---|
| இல: 170, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். | 150,000.00 | 20,000.00 |

2. ஒப்பந்த ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு 7ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லையில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைமைக்காரியாலத்தில் பெறுகை அலகில் அல்லது இல: 20, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை, வடமாகாண அலுவலக முகவரியிலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபா மற்றும் வரிகளும் செலுத்தி 2023ம் ஆண்டு சித்திரை மாதம் 24ம் திகதி முதல் 2023ம் ஆண்டு வைகாசி மாதம் 04ம் திகதி வரையிலான வேலை நாட்களில் காலை 9.30 மணி முதல் மாலை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இலவசமாக குறித்த காலப்பகுதிக்குள் மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் பார்வையிடலாம்.
3. ரூபா 20,000.00 மதிப்பிலான விலை மனுப்பிணைத்தொகை காசாகவோ அல்லது வங்கி உத்தரவாதமாகவோ இலங்கையில் இயங்கும் வங்கியினால் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு கேள்வி விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். விலைமனுப் பிணைத்தொகை கேள்வி மூடப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்குள் செல்லுபடியுள்ளதாக இருக்க வேண்டும்.
4. 2023ம் ஆண்டு வைகாசி மாதம் 19ம் திகதி மதியம் 2.30 இற்கு கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகவே யாழ்ப்பாணம், பிரதான வீதி, இல: 20ல் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபை, வடமாகாண அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதியொருவர் சமூகமளிக்கலாம்.
5. கேள்வி ஆவணங்களில் இதற்கான சமர்ப்பித்தல் படிமுறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன.
6. மேலதிக விபரங்களை செத்சிறிபாய, பத்தரமுல்லை 7ம் மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை (பெறுகை அலகு) அல்லது நகர அபிவிருத்தி அதிகாரசபை, வடமாகாண அலுவலகம், இல: 20, பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலிருந்து அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

- தலைமைக்காரியாலய தொலைபேசி இலக்கம்- 011-2875916 நீடிப்பு 2681
- வடமாகாண அலுவலகம் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தொலைபேசி இலக்கம் 021-221-9519 மற்றும் 021-222-3269

தலைவர்
இறைவரி கேள்விச் சபை (கீழ்மட்டம்)
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
6ம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை.

(N - 1)

## சேவை நலன் பாராட்டு

**நியமனம் : 01.08.1999**
**ஓய்வு : 23.04.2023**




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் உத்தியோகத்தராக சேவையாற்றி ஓய்வுபெறும்

**திரு. சி. கதிர்காமநேசன்**
அவர்கள்

உடற்கல்வி அலகில் ஆற்றிய சேவையை பாராட்டுவதோடு அவரின் ஓய்வுகாலத்தில் சகல நலன்களையும் பெற்று சௌபாக்கியமாக வாழ வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: உடற்கல்விச் சமூகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(CS/24551)AH-1

## அலுவலகம் ஒன்றுக்கு இடம் தேவை

**யாழ் நகரில் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு**

ஒரு முன்னணி பயண நிறுவனம் ஒன்றுக்கு யாழ் நகரில் பொருத்தமான அலுவலக வளாகத்தை கீழ்காணும் தகுதிகளுடன் எதிர்பார்க்கின்றது.

- ✔ 900 SQ.ft. சதுர அடி
- ✔ 2- 3 மாடிகள் கொண்டதும்
- ✔ 4 வாகனங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட வாகனங்கள் நிறுத்த இடவசதி
- ✔ தனி மின்சாரம், தண்ணீர் விநியோகம்
- ✔ ஒவ்வொரு மாடிக்கும் குளிரூட்டி வசதிகள்
- ✔ யாழ் நகரை அண்டிய பிரதேசங்கள் விரும்பத்தக்கது.

**077 778 8931**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதி பெண்களை வலுவூட்டுவதில் அக்கறை காண்பிக்கும் டேவிட் பீரிஸ் குழுமம்





வாகனத்துறை மாத்திரமன்றி பல்வேறு துறைகளில் வெற்றிகரமாக இயங்கிவரும் டேவிட் பீரிஸ் குழுமம் வடபகுதி பெண்களை வலுவூட்டுவதில் அக்கறை காண்பித்துள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்பிலிருந்து மீண்டெழுந்துவரும் வடமாகாணத்தின் பெண்களை வலுப்படுத்த வேண்டிய தேவையை நன்கு அறிந்துகொண்டுள்ள இக்குழுமம் இதற்கான முயற்சிகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது. வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமம் இதுவரை வடக்கில் ஆரம்பித்துள்ள பல்வேறு திட்டங்களில் பெண்களின் வலுவூட்டல் திட்டமும் ஒன்றாகும்.

வடக்கில் உள்ள மக்களுக்கு போக்குவரத்து வசதிகள் குறித்த பிரச்சினை காணப்பட்டது. இவ்வாறான நிலையில் நாட்டிலுள்ள மக்கள் அனைவரையும் ஒன்றாகக் கருதும் நோக்கில் டேவிட் பீரிஸ் மோட்டார் நிறுவனத்தின் ஊடாக வடக்கிலுள்ள மக்களின் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதன் ஒரு அங்கமாக பஜாஜ் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் பஜாஜ் முச்சக்கரவண்டிகள் ஊடாக வடபகுதி மக்களின் போக்குவரத்துத் தேவை இலகுபடுத்தப்பட்டதுடன், தாம் மேற்கொண்ட பல்வேறு வியாபாரங்களுக்கும் இந்த வண்டிகள் பெரும் உறுதுணையாக அமைந்தன. விவசாயிகள் உள்ளிட்டவர்கள் தமது உற்பத்திப் பொருட்களை சந்தைக்குக் கொண்டு செல்வதற்கும், உற்பத்திகளின் விநியோகச் செயற்பாடுகளுக்கும் இவை உந்துசக்தியாக அமைந்துள்ளன. டேவிட் பீரிஸ் குழுமத்தின் நிதிச்சேவை பிரிவான அசட்லைன் பைனான்ஸ் நிறுவனத்தின் கிளைகள் வடமாகாணத்தில் திறக்கப்பட்டு வாகனக் கொள்வனவுக்கான நிதி வசதிகள் இலகுபடுத்தப்பட்டன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா போன்ற வடக்கின் பல்வேறு நகர்களில் அசட்லைன் கிளைகள் அமைக்கப்பட்டுள்ளன. கொவிட் தொற்று நோயின் பாதிப்பிலிருந்து நாடு மீண்டும் விடுபடத் தொடங்கியதும் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் வேக் சொப் வலையமைப்பு வடக்கில் விஸ்தரிக்கப்பட்டு வாகனத்துறையின் செயற்பாடுகள் வடக்கில் அழமாகக் காலூன்றின.

## பெண்கள் வலுவூட்டல்

இந்த நடவடிக்கைகள் ஊடாக வடக்கிலுள்ள மக்களுக்கு கிடைத்த முக்கியமான நன்மையாக பெண்களின் வலுவூட்டம் அமைந்துள்ளது. டேவிட் பீரிஸ் குழுமத்தின் ஸ்தாபகர் டேவிட் பீரிஸின் எண்ணக்கருவுக்கு அமைய இந்நாட்டில் உள்ள பெண்களை வலுவூட்ட நாடு முழுவதிலும் முற்றிலும் இலவசமாகப் பெண்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இந்த திட்டத்தில் இணைந்து கொள்ள வடக்கில் உள்ள பெண்களுக்கும் வாய்ப்பு கிடைத்தது. டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப பயிற்சி திட்டத்தில் 30 பெண்கள் இணைந்திருந்தனர். 20 பேர் சான்றிதழ் பெற்று பயிற்சியை நிறைவு செய்துள்ளனர்.

இந்தப் பயிற்சி திட்டம் இதற்கு முன்னர் கிளிநொச்சியில் நடைபெற்றது. பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டி பழுதுபார்த்தல் தொடர்பில் நடைமுறை பயிற்சி பெற்றனர். பயிற்சி நெறி முடிவின் போது இதனை பூர்த்தி செய்தவர்களுக்கு கராஜ் தொடங்குவதற்கு அல்லது கராஜில் திருத்துநராக வேலை செய்வதற்கு டேவிட் பீரிஸ் நிறுவனம் பயிற்சி அளிக்கின்றது. இதனை நிறைவு செய்த பெரும்பாலானோர் தற்பொழுது தேசிய தொழிற்பயிற்சி சபை நடாத்தும் பாடநெறியில் சேர்ந்திருப்பதுடன் இவர்களுக்கு நடைமுறைப் பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

டி.பி.எம்.சி. வேக்சொப்பில் அண்ணளவாக மாதாந்தம் 500 இற்கு மேற்பட்ட வாடிக்கையாளர்கள் வருகை தந்து கொண்டிருக்கிறார்கள். விசேடமாக தனியார் வாகன உரிமையாளர்களுடன் அரச நிறுவனங்கள் தங்கள் வாகனங்களை டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் வேலைத் தளத்தில் சேவையைப் பெற்றுக் கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. கூட்டு நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்நிறுவனத்தில் அனேகமானோருக்கு யாழ்ப்பாணத்தில் வேலை வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

"வாகனம் செலுத்தத் தெரிந்தாலும் வாகனத்தில் ஏற்படும் பிழைகளை எப்படி சரிசெய்வது என்பது தெரியாது இருந்தோம். தற்போது டேவிட் பீரிஸ் குழுமத்தின் தொழில்நுட்ப பயிற்சி ஊடாக எமது வாகனங்களை எவ்வாறு திருத்துவது எப்படி சரிசெய்வது எப்படி பழுதுகளை கண்டறிவது என்பது தொடர்பில் தெளிவடைந்துள்ளோம்" என டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் தொழில்நுட்பப் பயிற்சித் திட்டத்தில் பலன்பெற்ற பெண்கள் தெரிவிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்தில் டேவிட் பீரிஸ் நிறுவனத்தின் ஆரம்பமும் அது மிக விரைவாக முன்னெடுத்துவரும் திட்டங்களும் இந்த மண்ணுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளன என்பதில் மாற்றுக்கருத்தில்லை. இதனால் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள் மாத்திரமன்றி, தமது சொந்தக் காலில் நிற்க வேண்டும் என்ற வைராக்கியத்துடன் இருக்கும் ஏராளமான பெண்களின் குடும்பங்கள் நன்மை அமைந்துள்ளன. விசேடமாக கணவன்மார் மாற்றுத்திறனாளிகளாக இருக்கும் குடும்பங்களில் பெண்கள் தமக்கான அன்றாடப் பணிகளைச் செய்யும் அதேநேரம், மேலதிக வருமானத்தை ஈட்டுவதற்கு ஒரு மார்க்கமாகவும் இந்தப் பயிற்சி நெறி அமைந்துள்ளது.



வடமாகாணக் கல்வித்திணைக்களம், சர்வதேச லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்திய சுவரொட்டிப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பும் சான்றிதழ் வழங்கலும், சுன்னாகம் பிரதேசசபை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ம-14)

# 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்!

முல்லைத்தீவு, ஏப். 23

மாந்தை கிழக்கு பனங்காமம் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

பாடசாலையின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கருணராசா இன்பரசி விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கனடா நாட்டில் வசிக்கும் பிரகாஷ் குடும்பத்தின் நிதிப்பங்களிப்பில் 40 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்கச் செயலாளர் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உபகரணங்களை வழங்கினர். (ம-14.20)



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 05 . 1949



மறைவு 21 . 04 . 2023

## திருமதி பூலோகநாயகி மாணிக்கவாசகர் (கிளி)

புங்குடுதீவு 10ம் வட்டாரம், Sri Lanka (பிறந்த இடம்) புங்குடுதீவு இறுப்பிட்டி, யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரம் கண்ணகிபுரத்தைப் பிறப்பிடமாகவும், 4ம் வட்டாரம் இறுப்பிட்டியை வாழ்விடமாகவும், இல 240 தேக்கம் தோட்டம் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட பூலோகநாயகி மாணிக்கவாசகர் அவர்கள் கடந்த (21.04.2023) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தளையசிங்கம் ஆச்சிக்கண்ணு தம்பதிகளின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா முத்துப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (பழனி- வாத்தியார்) அவர்களின் அன்பு மனைவியும், கிருஸ்ணலதா (செட்டி- சுவிஸ்), வினாயகரூபன் (ரூபன்- ஜேர்மனி), விக்கினேஸ்வரன் (வரணி- வவுனியா), கௌரிதேவி (செல்லம்- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவனடியாள் (ஆத்தை), திருநாவுக்கரசு ஆகியோரின் மைத்துனியும், ஐயாத்துரை, நாகரெத் தினம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும், வசிகரன் (பவான்- சுவிஸ்), சுகந்தா (ஜேர்மனி), ராதிகா (வவுனியா), அன்பமுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும், கோதைநாயகி, காலஞ்சென்ற பஞ்சலிங்கம் மற்றும் அமிர்தநாயகி (லண்டன்), சிவலிங்கம் (சுவிஸ்), கிருபானந்தலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற சதானந்தலிங்கம் (சுவிஸ்) மற்றும் தெய்வநாயகி (சுவிஸ்), சுவீந்திரலிங்கம் (ஜேர்மனி), சதீஸ்லிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் லீலாவதி, காலஞ்சென்ற ஜெகநாதன் மற்றும் ஜெயராணி, வினிதராணி, ராஜகுமுதினி, மணிவண்ணன், சிவசக்தி, ரஜனி ஆகியோரின் மைத்துனியும், வகிஷா, அரிசன், கரிசன், சுவீனா, விஸ்வா, சுமீரா, பவின்சன், சபின்ஷன், கவின்யா, அனா, அனிசன், அக்ஷை ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (24.04.2023) திங்கட்கிழமை மு.ப 08:00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் தோணிக்கல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**வீட்டுமுகவரி: இல 240, தேக்கம் தோட்டம், வவுனியா.**

**தொடர்புகளுக்கு:**

**வீடு - குடும்பத்தினர் Mobile : +94773872561 வரணி - மகன் Mobile : +94726500272**

(CS 24576) A-1

# நண்பர்களின் இதய அஞ்சலி

தோற்றம் 05 . 08 . 1949



மறைவு 21 . 04 . 2023

## இரத்தினம் செல்வராசா

சமாதான நீதவான் (J.P)

எமது ஆலய தொண்டரான துசிந்ததாஸ் (துர்க்கா) அவர்களின் அன்புத் தந்தை இரத்தினம் செல்வராசா அவர்களின் மறைவையிட்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு, குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் நண்பர்கள்**




நடிகர்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி சர்வதேச விமான நிலையத்தை நேற்று வந்தடைந்தனர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிவாஜி கணேசனின் வாழ்க்கை வரலாறு தொடர்பான ஆய்வு நூல் இன்று வெளியீடு செய்யப்படவுள்ளது. இதில் கலந்து கொள்ளவே அவர் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார். (அ-ஒ.20)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LAND WANTED

நிலம் அல்லது வீடு நீண்ட கால வாடகைக்கு தேவை.
யாழ்ப்பாணம் A9 பிரதான வீதிக்கு அருகில், யாழ்ப்பாண நகரத்திலிருந்து 5 கிலோ மீற்றர் தொலைவில் 120 பேர்ச் காணி அல்லது வீட்டுடன் கூடிய காணி நீண்ட கால வாடகைக்கு தேவை.
தயவுசெய்து விலையை எனக்குத் தெரியப்படுத்துங்கள்.

**Vajira House**

**071 922 8888 070 240 2441**

1916 ம் ஆண்டு தொடக்கம், **107** வருட 4 தலைமுறையாக தொடரும் கட்டிட நிர்மாண துறையின்

**வஜிர ஹவுஸ்**

23, டீல் பிளேஸ் A, கொள்ளுபிட்டி

## சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் அமைந்துள்ள பிரபல **Tourist Hotel** ஒன்றிற்கு பின்வரும் வெற்றிடங்களுக்கு தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
1). Asst.Manager
2). Chef
3). Asst.Chef
4). Room Boy
5). Account Clerk

முன் அனுபவம் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: **0777 604 667**
(CS 24567)A-1

## கண்ணீர் அஞ்சலி



கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் 8ஆம் திருவிழா உபயகாரராகிய

**திருமதி வரதராஜா இராஜசிலோஜனா**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய வீரகத்தி விநாயகரையும், ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரப் பெருமானையும் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆலய சிவாச்சாரியார்,**
**புனருத்தாரணசபை, அன்னதானசபை,**
**ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில், கொல்லங்கலட்டி.**
(CS/50132)AH-1

## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 05 . 1981



இறப்பு 21 . 04 . 2023

### ஆறுமுகம் நாகரட்ணம் (நந்தா)

ஹற்றனைப் பிறப்பிடமாகவும், மணியந்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் நாகரட்ணம் (நந்தா) நேற்றுமுன்தினம் (21.04.2023) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் ஆறுமுகம் - அங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரேசலிங்கம் - இராசலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், சூட்டியின் (மோகா) அன்புக் கணவரும், ஹரிஸின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.04.2023) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/50119)AH-1 **தகவல்: குடும்பத்தினர்.**

## மணமகள் தேவை

1989 இந்து, மூலம். Doctor பருத்தித்துறை. பதிவு #8557. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com
**076 664 9401** (CS/23848) AH-1

## மணமகள் தேவை

1985 இந்து, பூராடம். Doctor பருத்தித்துறை. பதிவு #8586. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com
**076 664 9401** (CS/23848) AH-1

## மணமகன் தேவை

1993, இந்து, திருவாதிரை. Doctor வவுனியா. பதிவு #8645. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com
**076 664 9401** (CS/23849) AH-1

## மணமகன் தேவை

1991, இந்து, ரோகினி. Doctor தலவாக்கலை. பதிவு #8570. No Broker Commission, Register Fees Only. Ensured Quality Lanka Pvt Ltd. Colombo 04. www.EQMarriageService.com
**076 664 9401** (CS/23849) AH-1

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணம் பருத்தித்துறை PPT இல் அமைந்துள்ள பிரபல Hotel க்கு தகைமை வாய்ந்த மற்றும் அனுபவமுள்ள கணக்காளர்கள் தேவை
தொடர்பு : 076 - 058 98 22

## காணியுடன் வீடு விற்பனைக்கு

திருநெல்வேலி வளாக வீதியில் 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு.
தொடர்பு: **076 739 2518**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 43 வயது எழுத்து எழுதி விவாகரத்து பெற்ற மணமகனுக்கு மணமகள் தேவை
**077 905 8615 (Viber&Whatsapp)**

## வீடுவாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 3 Bed Room உடன் இணைக்கப்பட்ட குளியல் அறை, வரவேற்பறை, Kitchen, 2 Bath Room, Marble பதிக்கப்பட்ட வீடு இரண்டு வருடங்களுக்கு வாடகைக்குக் கொடுக்கப்படும். (Anex House)
**075 8400 284**
(CS/50133)AH-1

## சமையலாளர் தேவை

யாழ். நகரில் இயங்கிவரும் விருந்தினர் விடுதியில் இயங்கிவரும் Restaurant ஒன்றுக்கு பொருத்தமான சமையலாளர் தேவை.
**077 6341 525** (CS24568)(J-1)

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் தங்குமிட விடுதிக்கு (Hotel & Restaurant) பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
வரவேற்பாளர் - ஆண் / பெண்
விடுதி பணியாளர்கள் - Room Boys (ஆண்)
சமையலாளர்
விடுதி காப்பாளர் (இரவு / பகல்)
முழுமையான சுயவிபரக் கோவையோடு விண்ணப்பிக்கவும்.
மின்னஞ்சல் முகவரி : [illegible]@gmail.com
**+94 776 392235**
(CS/39704)AH-1

## வருடாந்த உற்சவம்

அச்சுவேலி வடக்கு அருள்மிகு ஸ்ரீ சித்திவேலாயுதர் ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.
11 தினங்கள் நடைபெறவுள்ள உற்சவத்தில் எதிர்வரும் 2ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் மறுநாள் சப்பரத் திருவிழாவும் எதிர்வரும் 4ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் 5ஆம் திகதி தீர்த்தோற்சவமும் அன்று மாலை கொடியிறக்க உற்சவமும் நடைபெறும் என்று ஆலய பரம்பரை தாபரிப்பாளர் இ.நித்தியகஜேந்திரன் ஐயர் தெரிவித்துள்ளார். (ச)

### நாய்களுக்கு கருத்தடை

தென்மராட்சி பிரதேசத்தில் பெண் வளர்ப்பு நாய்களுக்கு கருத்தடை மேற்கொள்ளும்பணிகளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் ஆரம்பித்துள்ளனர்.
அதற்கமைய கொடிகாமம் பகுதியில் நாளை 24ஆம் திகதியும் நாவற்குழி பிரிவில் எதிர்வரும் 26ஆம் திகதியும் நாய்களுக்குக் கருத்தடை மேற்கொள்ளப் படவுள்ளது.
(ச-9)

## தேவை

சிறிய விடுதி ஒன்றிற்கு அறை பராமரிப்பாளர் (பெண்) தேவை.
சம்பளம் 18,000 பேசித் தீர்மானிக்கலாம்.
**071 0899 633**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் பழுதடைந்த டிபிறீசர், கூலர் விற்பனைக்குண்டு. (திருத்தக்கூடியது)
**071 0899 633**

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ். வவுனியா, கிளிநொச்சிக்கு அலுவலக உதவியாளர், வெளிக்கள உத்தியோகத்தர் உடனடியாக தேவை. ஆண்/பெண் (O/L)
**076 112 4145**

## வீடு விற்பனைக்கு

IBC Road ல் காலி வீதிக்கு அருகாமையில்
3 Bedroom Apartments 1210 சதுர அடியில் உடன் விற்பனைக்கு உண்டு.
தரகர் வேண்டாம் Contact : **077 5479745**

## வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் எண்ணை தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆள்கள் தேவை. ஆண் / பெண்.
**075 981 7124**
(CS 24562) (2-6)

## காணி விற்பனைக்கு

ஆதிமயிலிட்டி பிரதேச சபைக்கும் சிவபூமி கந்தபுராண ஆச்சிரமத்துக்கும் இடையில் ஆலயங்கள் சூழ்ந்த குடியிருப்பு சூழலில் 11 பரப்பு, 9 3/4 பரப்பு, 11 1/2 பரப்பு காணிகள் கிணற்று நீர் வசதி மின்சார வசதிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தரகர் வேண்டாம்.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
**070 469 9402**
(CS/9302)AH-1

## காணி விற்பனைக்கு

நல்லூர் கைலாசப்பிள்ளையார் கோவில் அருகில் வீட்டுடன் காணி விற்பனைக்கு.
தொடர்பு: **077 3111 361**

## வீடு வாடகைக்கு தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் இருவர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை. குறைந்த முற்பணம் விரும்பத்தக்கது.
தொடர்பு: **077 6354 224**

## எரிபொருள் நிரப்புநர் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்ற எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் நிரப்புநர் தேவை.
**077 343 3890**
முகவரி- மணிக்கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(இன்று காலை 10 மணிக்குப் பின் தொடர்பு கொள்ளவும்)
(CS/50137)AH-1

## வேலைவாய்ப்பு - திருகோணமலை (Vacancy - Trincomalee)

நகர மத்தியில் அமைந்துள்ள உயர்தர உணவகத்துக்கு
- ✓ Juice Makers / Ice Cream Cutter தேவை.
- ✓ Age / வயது - 30 - 50
- ✓ தங்குமிட வசதி மற்றும் 3 நேர உணவும் தரப்படும்.
  - ➡ முன்னனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
  - ➡ ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். (Male / Female)
  - ➡ கவர்ச்சிகரமான சம்பளம் தரப்படும்.

(CS/24533)AH-1
தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம் : **075 909 8732**

## நிறைவாழ்வு மையம் தையல் ஆசிரியர் தேவை

மந்துவில் வடக்கு, கொடிகாமம், பொதுநோக்கு மண்டபத்தில் இயங்கும் தையல் பயிற்சி நிலையத்திற்கு அனுபவம் வாய்ந்த தையல் ஆசிரியர் தேவை.
தொடர்புகளுக்கு:
**077 9177 230**
**077 7370 494**
(CS 24566)A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுந்தீவில்...

**சடலங்களை கண்டறிந்தது எப்படி?**

இன்றையதினம் நெடுந்தீவிலுள்ள ஆலயத்தில் நடைபெறும் கும்பாபிஷேக நிகழ்வு ஒன்றில் பங்குபற்றுவதற்காகவே வெளிநாட்டவர்களும், உறவினர்களும் அங்கு வந்து நாகசுந்தரியின் வீட்டில் தங்கியிருந்துள்ளனர். நேற்றுக் காலை வெளிநாட்டில் உள்ள உறவினர்கள், சம்பவம் நடந்த வீட்டில் தங்கியிருந்தவர்களுக்குத் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டபோதும், எவரும் பதிலளிக்கவில்லை. இதனையடுத்து யாழ்ப்பாணத்திலுள்ள உறவினர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டு அவர்கள், நெடுந்தீவில் குறித்த வீட்டுக்கு அருகேயுள்ள கடையொன்றின் உரிமையாளரைத் தொடர்புகொண்டுள்ளனர். அவர் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது அங்கிருந்தவர்கள் சடலங்களாகக் காணப்பட்டுள்ளனர். உடனடியாகப் பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அந்த வீட்டை அண்மித்த பகுதிக்குள் யாரும் செல்ல முடியாதவாறு தடை ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் நெடுந்தீவிலிருந்து வெளியிடங்களுக்கான படகுப் போக்குவரத்தும் முடக்கப்பட்டது.

**குத்தியும் வெட்டியும் கொலை**

வீட்டின் வெளிப்புறத்தில் இரண்டு பெண்களின் சடலங்கள் ஒன்றுடன் ஒன்று கட்டிப்பிடித்தவாறு காணப்பட்டுள்ளன. வீட்டினுள் இருந்த அறைகள் ஒவ்வொன்றிலும் ஏனைய 3 பேரின் சடலங்களும் காணப்பட்டுள்ளன. அதில் ஒரு சடலம் இருந்த அறையின் கதவு வெளிப்புறமாக பூட்டப்பட்டிருந்தது. உயிரிழந்த அனைவரது முகம் மற்றும் தலைப்பகுதிகளிலேயே கொலையாளி கூரிய ஆயுதத்தால் குத்தியும், வெட்டியுமுள்ளான்.

**மீட்கப்பட்ட 100 வயது மூதாட்டி**

காயமடைந்த 100 வயதான மூதாட்டி மற்றொரு அறைக்குள் கைகள் கட்டிய நிலையில் முனகிக் கொண்டிருந்தபோது மீட்கப்பட்டு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரது தாடைப்பகுதியில் காயம் காணப்படுகின்றது.

**நாயையும் வெட்டிய கயவர்கள்**

உயிரிழந்த ஒருவரின் அடையாள அட்டை மடிக்கப்பட்டு மலசலகூடக் குழியினுள் போடப்பட்டு தண்ணீர் ஊற்றப்பட்டுள்ளது. எனினும் அது இடைநடுவே சிக்கிக்கொண்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. இந்த வீட்டில் நின்றிருந்த நாயையும் கழுத்தில் வெட்டிக் காயப்படுத்தியுள்ளனர். இதேவேளை - கொலையாளியுடன் சண்டை பிடித்தமைக்கான தடயங்கள் எதுவும் வீட்டில் காணப்படவில்லை எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

**வீட்டுக்கருகில் கடற்படை முகாம்**

உயிரிழந்தவர்களின் வீட்டிலிருந்து கூப்பிடு தூரத்தில் சுமார் 10 தொடக்கம் 15 மீற்றர் தூரத்திலேயே கடற்படையினரின் முகாம் காணப்படுகின்றது. இந்தக் கொலைச் சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 10 மணிக்குப் பின்னர் நடந்திருக்கவேண்டும் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

**மக்கள் போராட்டம்**

இதேவேளை - ஊர்காவற்றுறை நீதிவான் ஜே.கஜநிதிபாலன் நெடுந்தீவில் படுகொலை இடம்பெற்ற வீட்டுக்குச் சென்று, உடலங்களை பார்வையிட்டுவிட்டு திரும்பியவேளை நெடுந்தீவு மக்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர். கொலையாளிகளை கைது செய்யுமாறு வலியுறுத்தினர்.

இதேவேளை - யாழ். மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள 3 பொலிஸ் குழுக்களை களமிறக்கியுள்ளதாகத் தெரிவித்தார். இந்தக் கோரக்கொலைகள் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் நேற்று நள்ளிரவு புங்குடுதீவில் வைத்துக் கைது செய்யப்பட்டாரென்று தெரிவிக்கப்பட்டபோதும், அதை இந்தச் செய்தி அச்சுக்குப் போகும்வரை உறுதிப்படுத்த முடியவில்லை. (அ-ஓ.5,20,26,125)

## வடக்கில்...

10ஆம் திகதி வரையில் அவ்வப்போது மதியத்துக்குப் பின்னர் இடைக்கிடையே மழை கிடைப்பதற்கான வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

'நீண்ட காலத்தின் பின் மேடன் யூலியன் அலைவு இந்துசமுத்திர பிராந்தியத்துக்கு வந்துள்ளது. அத்துடன் றொஸ்பி அலைகளும் வருகை தந்துள்ளது. இதன் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 10ஆம் திகதி வரை அவ்வப்போது மதியத்துக்கு பின்னர் பரவலாக மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனால், இந்த மழை இடியுடன் கூடிய மழையாகவே இருக்கும். அதேவேளை எதிர்வரும் 28ஆம் திகதிக்குப் பின்னர் இலங்கைக்கு தென்கிழக்கே தாழமுக்கம் ஒன்றும் உருவாகும் வாய்ப்புள்ளது. எனினும் இதனை தற்போது உறுதிப்படுத்த முடியாது' என்று குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ,5)

## யாழில்...

நேற்று மாலை காற்றுடன் கூடிய மழை கிடைத்துள்ளது. இதனால் வீதிப் போக்குவரத்துக்கு இடையூறாக சில மரங்கள் முறிந்தும் வீழ்ந்துள்ளன. வடமராட்சி, அம்பன் மருத்துவமனை வளாகத்தில் மின்னல் தாக்கியதில் மரக்கிளைகள் முறிவடைந்துள்ளன.

வடக்கில் கடந்த மூன்று நாள்களாக மாலை வேளைகளில் இடி மின்னல் காற்றுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவு மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவு ஆகியனவற்றில் நேற்றுமுன்தினம் மாலை காற்றுடன் கூடிய மழையால் சுமார் 15 வீடுகள் வரையில் சேதமடைந்துள்ளன. வவுனியா மாவட்டத்தில் பயன்தரு பப்பாசி மரங்கள் அழிந்துள்ளன.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தென்மராட்சி மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் நேற்று மாலை இடி மின்னல் காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதன் காரணமாக கொடிகாமம் பருத்தித்துறை வீதியில் பனைமரம் ஒன்று வீதிப்போக்குவரத்துக்கு இடையூறாக முறிந்து வீழ்ந்துள்ளது. (அ-ஓ.5)

## உழைப்பாளிகளே...

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கிய தமிழிலங்கையில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் காரணமாக ஏற்படும் சிறிய அல்லது பெரிய இழப்புக்கள், வசதியீனங்கள் ஆகியவற்றை தயவுசெய்து பொறுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் 'ரில்கோ' விடுதியில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றாடம் உழைத்துச் சாப்பிடும் மக்கள், சாதாரண தொழிலாளர்கள், வறுமைகோட்டுக்கீழே வாழும் எங்கள் உடன்பிறப்புக்கள் அனைவருக்கும் ஏற்படும் இடையூறுக்கு வருத்தம் தெரிவிக்கின்றோம். நிரந்தரத் துன்பம் ஒன்றைத் தவிர்க்கவேண்டுமானால் தற்காலிகமான துன்பங்களை சுமந்துதான் தீரவேண்டும் என்கின்ற விலக்கப்படமுடியாத விதியை உணர்ந்தவர்களாக நாம் செயற்படவேண்டும்.

ஒட்டுமொத்த மக்களும் எதிர்ப்பை வெளிப்படுத்தவேண்டும். எமது மக்கள் மத்தியிலுள்ள பலவிதமான பிரிவினரும் முழுமனதோடு ஆதரவை தருவார்கள் என்று நம்புகின்றோம் - என்றார். (அ-ஓ.5)


**காணி விற்பனைக்குண்டு**

பூநகரி வெட்டிக்காடு
என்னும் இடத்தில்
23 1/2 ஏக்கர்
தென்னம்பிள்ளையுடன்
அமைந்த கஜூ தோட்டம்
விற்பனைக்குண்டு.

(CS/50138A)AH-1

**076 236 5584, 076 546 9030**

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில் அமைந்துள்ள
பிரபலமான ஹாட்வெயார்
ஒன்றுக்கு வேலையாள்கள்
தேவை.
முன்னனுபவமுள்ளவர்கள்
விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 772 2589**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ். நகருக்கு மிக
அண்மையில் அமைந்துள்ள
அல்லை விலாசுக்கு
அருகாமையில் காணப்படு
கின்ற 54 1/2 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு. (CS/50138) AH-1

**076 236 5584, 076 546 9030**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **கைதடி A-9 பிரதான வீதியுடன்** 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும். 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ✓ நல்ல தண்ணீர் ஊற்று சூழல்
- ✓ திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.
- ✓ ஒரு பரப்பின் விலை 35 இலட்சம்

**பார்வையிடும் நேரம்:-**
**காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் **சாவகச்சேரிப்** பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

- ✓ சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- ✓ A-9 பிரதான வீதியில் இருந்து 700M தூரம்.
- ✓ காய்க்கும் தென்னைகள் 36 உள்ளன.
- ✓ 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- ✓ ஒரு பரப்பின் விலை 19 இலட்சம் முதல் 17 இலட்சம் வரை

**பார்வையிடும் நேரம்:- காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை.**

தரகர் தேவையில்லை.

**தொடர்புகளுக்கு: ஜெயம்**
**077 8147 389**
**077 9865 457**

(CS 24346) (J-1) (CS 24547)A-1

**காணி விற்பனைக்கு**

யாழ். நாவற்குழி A-09 வீதியில் இரண்டாம் காணி 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ **இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்**
- ✓ **குடியிருப்பு உள்ள சூழல்**
- ✓ **நன்னீருற்று சூழல்**
- ✓ **1 பரப்பின் விலை** 650,000/= **ரூபா மட்டும்.**

**076 4365 814, 077 0654 525**

**வேலை வாய்ப்பு (ஆண்கள்)**

- யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றில் விற்பனைப் பிரதிநிதி பணிக்கான வெற்றிடம் உள்ளது.
- முன் அனுபவம் மற்றும் நல்ல சந்தைப்படுத்தல் திறன் கொண்ட விண்ணப்பதாரர்கள் இந்த காலியிடத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
- விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடங்கள் கிளிநொச்சி / முல்லைத்தீவு / மன்னார் / [illegible]

**077 351 9463**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஹர்த்தாலுக்கு...

துண்டறிக்கை விநியோகத்தில் ஈடுபட்டனர். யாழ்ப்பாணம் 'ரில்கோ' விடுதியில் நேற்றுக்காலை இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பைத் தொடர்ந்து யாழ். நகரப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், சந்தை என்பனவற்றினுள் துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது. ஹர்த்தாலுக்கு ஏன் ஆதரவளிக்கவேண்டும் என்று அச்சிடப்பட்ட துண்டறிக்கையே ஒவ்வொரு வர்த்தகர்களுக்கும், நகரில் நின்றிருந்த பொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது.

இதேவேளை - சுன்னாகம் உள்ளிட்ட குடாநாட்டின் ஏனைய நகரப் பகுதிகளிலும் வடக்கின் ஏனைய மாவட்டங்களிலும் நேற்று துண்டறிக்கை விநியோகிக்கப்பட்டது.

இதில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சோ.சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் ந.சிறீகாந்தா, செயலர் எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், மாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். (அ-ஒ.5)

## மாடு..

கின்றனர். வடமராட்சி, துன்னாலையைச் சேர்ந்த 24 மற்றும் 26 வயதுடைய 2 இளைஞர்களே கைதாகியுள்ளனர்.



யாழ்ப்பாணம் மாநகர், வட்டுக்கோட்டை, அளவெட்டி, தெல்லிப்பழை, வடமராட்சி உள்ளிட்ட பிரதேசங்களில் 25க்கும் மேற்பட்ட மாடுகளை இவர்கள் நேரடியாகத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

5 பேர் கொண்ட இந்தக் கும்பல், பகலில் மோட்டார் சைக்கிளில் சென்று மாடுகளை நோட்டமிட்டு இரவில் வாகனத்தில் சென்று இரும்புச் சங்கிலி பிணைத்து மாடுகளை ஏற்றி வந்து கப்பூது வெளியில் வைத்து இறைச்சியாக்கி விற்பனை செய்துள்ளமை விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது. அந்த இடத்தில் இறைச்சியாக்கப்பட்ட மாடுகளின் எச்சங்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் பெரும்பாலான பசுமாடுகள் இறைச்சியாக்கப்பட்டு, உடுப்பிட்டியிலுள்ள மாட்டிறைச்சிக் கடை மூலமாகவே விற்பனை செய்யப்பட்டுள்ளன என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

திருட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம், இரும்புச் சங்கிலி மற்றும் வாள் என்பன சந்தேகநபரிடம் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரே தடவையில் 2 மாடுகளை களவாக ஏற்றிச்சென்று இறைச்சியாக்கி விற்பனை செய்தால் 2 லட்சம் ரூபா வருமானம் கிடைப்பதாகவும் கைதான சந்தேகநபர்கள் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

மாடுகளைக் களவாடச் செல்லும் வாகனத்தின் இலக்கத்தை சேறு, சாணகம் அல்லது துணிகளால் மறைத்துச் செல்வதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ-ஒ.26)


**ENGLISH CLASSES**

SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆர்வமுள்ள சகலருக்கும்

From Grade 7 to Graduates

தொழில்புரிபவர்களுக்குமானது.

K.Ganesh B.A 077 766 8725

**தேவை**

பற்றறியில் இயங்கும் பாவித்த நல்ல நிலையிலுள்ள சைக்கிள் தேவை.

074 367 2959

**தேவை**

மல்லாகம், நீதிமன்ற வீதியில் இயங்கும் புத்தகப் பண்பாட்டுப் பேரவையின் புத்தகங்களை இல்லம் தோறும் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் தேவை. தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இயக்குநர் - 077 88 51 989

**Hotel பணியாளர்கள் தேவை**

புதிதாக அமைக்கப்பட்டுள்ள Hotel & Restaurant இற்கு பணியாளர்கள் (ஆண்/ பெண்)

✓ Receptionist ✓ Waiter ✓ Cook
✓ House Keeper ✓ Cleaner ✓ Kitchen Helper

குறிப்பு:- முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

Saffron Hotel & Restaurant 077 834 8336

**பணியாளர்கள் தேவை**

யாழ்.நகரில் செயல்படும் வெதுப்பகத்திற்கு பின்வரும் நிலைகளில் பணியாளர்கள் வேண்டப்படுகின்றனர்.
கேக் வேலை தெரிந்தவர்கள் / பழக ஆர்வம் உடையவர்கள் தேவைப்படுகின்றனர் (ஐசிங் வேலை)

077 3500 605

**Technician தேவை**

யாழ் நகரப் பகுதியில் உள்ள பிரபல நிறுவனத்துக்கு இலத்திரனியல் மின் உபகரணங்கள் (Angle Grinder, Impact Driller, Rottery Hammer, High Pressure and Compressure) திருத்துவதற்கு நன்கு அனுபவமுள்ள Technician உடனடியாகத் தேவை.



076 668 5247, 076 971 3394

**பணியாளர்கள் தேவை**

கல்வியங்காட்டில் இயங்கும் பான்சிக் கடைக்குப் பின்வரும் பணியாளர்கள் தேவை.

✓ முகாமையாளர் - பெண் - கணினி அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
✓ விற்பனையாளர் - பெண்

பொருத்தமான சம்பளம் வழங்கப்படும்.

077 041 1742

**வீடு விற்பனைக்கு**

வட்டுக்கோட்டை, உடுக்கியவளை பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வீடு விற்பனைக்கு உண்டு.

077 819 1314

**பணிப்பெண் தேவை**

இளவாலையில் உள்ள வீடொன்றிற்கு வீட்டுப்பணிப்பெண் தேவை. சம்சளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

076 917 2569

**குருக்கள் or அர்ச்சகர் தேவை**

உக்குளாங்குளம் சித்தி விநாயகர் ஆலயத்திற்கு அவசரமாக குருக்கள் or அர்ச்சகர் தேவை. தங்கும் இடம் வழங்கப்படும்.

ஆலய பரிபாலன சபை

077 603 3720

சாதாரண மற்றும் உயர்தர பரீட்சையில் சித்தியடையாதவர்களுக்கு மட்டும் ஓர் அரிய வாய்ப்பு

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது G.M(Pvt) Ltd நிறுவனத்துக்கு மிகக் குறைந்த அடிப்படைத் தகைமையின்றி பயிற்சியுடன் குறுகிய காலத்துக்குள் அலுவலகத்தில் வேலை செய்வதற்கான ஓர் அரிய வாய்ப்பு.

**24.04.2023 - 28.04.2023** வரை நேர்முகத் தேர்வு நடைபெறும்.

074 346 7370
076 116 5481

CS/245991AH-1

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 18 பரப்புக் காணி விற்பனைக்குண்டு **(நிலப்பரப்பு)**

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி. புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும் (120,000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

**பார்வையிடும் நேரம்**

**காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை**

தொடர்பு:- 076 755 8606
077 638 5683

(CS 50091) A-1

**காணி விற்பனைக்கு உண்டு**

✱ யாழ்ப்பாணம் புத்தூரில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**

✱ பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
✱ மூன்று பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.
✱ நன்னீரூற்று
✱ குடியிருப்பு சூழவுள்ள பகுதி
✱ பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை. (முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது).
(ஒரு பரப்புக் காணியின் விலை மூன்று இலட்சம் (300,000/=)



**தொடர்பு:**

077 4683 354
076 9119 371
076 7390 413

(CS 50092) A-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பந்திவைத்துப் பரிமாறிப் பசியாறவே சீனர்
முந்திவந்து டொலர் தந்து எம்நாட்டு - மந்திகளை
லட்சமாய் அனுப்புமாறு உச்சமாய் கேட்கிறார்
எச்சிலான தேசத்தில் குரங்குக்குமில்லையோ இனி வாழ்வு?

- சுவாமி கொரோனானந்தா



# குரங்காட்டி அரசியல் ?

○ நிலாந்தன்

குரங்குகளை சீனாவுக்கு விற்கும் விடயம் இந்தக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் செயலுக்குப் போகவில்லை. ஆனால் குரங்குகள் நாட்டின் தலைப்புச் செய்திகளாகிவிட்டன. கடந்த வாரம் இலங்கைத்தீவில் அதிகம் மீம்ஸ்கள் உருவாக்கப்பட்டது குரங்குகளுக்குத்தான்.

இலங்கையில் மொத்தம் 30 லட்சம் குரங்குகள் உள்ளதாகக் கணிப்பிடப்படுகிறது. ஆனால் இந்தக்குரங்குகள் அண்மைய ஆண்டுகளில் விவசாயத்துக்கு பெருநாசத்தை விடுவிப்பதாக விவசாயிகள் முறையிடுகின்றார்கள். குறிப்பாக ஆற்றங்கரைகளில் பயிர் செய்பவர்கள் குரங்குகளினால் அதிகம் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இதனால் விவசாயிகளில் ஒரு பகுதியினர் யானை வேலியை அமைத்து வருவதாகவும் ஒருமுறை அந்த வேலியில் முட்டினால் குரங்கு மீண்டும் அந்தப் பகுதிக்கு வரத் தயங்கும் என்றும் அவதானிக்கப்பட்டுள்ளது.

மன்னாரைச் சேர்ந்த ஓர் அரசியல் செயற்பாட்டாளர் (அதேசமயம் விவசாயப் பாரம்பரியத்தில் வந்தவர்) சொன்னார், தங்களுடைய ஊரில் முன்பு குரங்குகளின் வாயைக் கட்டும் நுட்பம் தெரிந்த மாந்திரீகர்கள் இருந்ததாக. அவர்கள் மரங்களில் ஏறி எதையோ செய்வார்களாம். அதன் பின் குரங்குகள் அந்த மரங்களுக்கு வந்தாலும் காய்கறிகளில் வாய் வைப்பது இல்லை என்று அவர் சொன்னார். அது விஞ்ஞானபூர்வ மாக நிரூபிக்கமுடியாத ஒரு நம்பிக்கை. ஆனால் காட்டோரமாக விவசாயம் செய்பவர்கள் சில சமயங்களில் குரங்குத் தொல்லை தாங்கமுடியாத போது வேட்டைத் துவக்கினால் குரங்கு களைக் கொல்வதும் உண்டு. கொல்லப்பட்ட குரங்கின் உடலை அப்பகுதியில் தொங்கவிடுவார்கள். அதன் மூலம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஏனைய குரங்குகளின் வருகையைத் தடுக்கலாம் என்று அவர்கள் நம்பினார்கள்.

விவசாயிகள் மட்டுமல்ல காட்டுக்கு அருகே இருக்கும் கிராமவாசிகளும் வீடுகளில் பயிர்பச்சை வைக்க முடியாத ஒரு நிலைமை காணப்படுவதாக முறையிடுகிறார்கள். குறிப்பாக-வன்னிப்பெருநிலத்திலும் யாழ்ப்பாணம் தென்மராட்சியிலும் இந்த நிலைமை உண்டு. வீட்டில் ஆசையாக ஒரு பயிர் பச்சையை வைத்தால் குரங்கு அதைப் பிடுங்கிச் சாப்பிட்டு விடுகிறது என்று சொல்லுகிறார்கள். மாங்காய்களை மட்டுமல்ல பயன்தரு மரங்களின் துளிர்களையெல்லாம் குரங்குகள் சாப்பிட்டு விடுவதாகவும் வன்னியில் முறைப்பாடு உண்டு.

இலங்கைத் தீவின் பொருளாதாரத்தை எல்லா அதிர்ச்சிகளின் போதும் தாங்கிப் பிடித்தது விவசாயம்தான். அந்த விவசாயத்துக்கு குரங்கு ஒரு எதிரியாக மாறியிருப்பதாக விவசாயிகள் முறைப்பாடு செய்கிறார்கள். அதுதொடர்பாக புள்ளிவிபரங்களும் உண்டு. புள்ளிவிபரங்களால் இந்தக்கட்டுரையை நிரப்பக்கூடாது என்பதனால் அதைத் தவிர்க்கிறேன்.

அரசாங்கம் கடந்த பெப்ரவரி மாதம் குரங்கை ஒரு பீடை என்று அறிவிக்கும் அளவுக்கு குரங்குகள் விவசா யத்துக்குப் பாரதூரமான சேதத்தை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டன. அண்மையில் அரசாங்கம் பாதுகாக்கப்பட வேண்டிய விலங்குகள் பட்டியலில் இருந்து குரங்குகளை நீக்கும் அளவுக்கு குரங்குகள் ஆபத்தானவையாக மாறிவிட்டன. எனவே பீடையாக மாறிய குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதிசெய்து டொலரைச் சம்பாதிக்க அரசாங்கம் முடிவெடுத்ததா?

குரங்குகளை சீனாவுக்கு அனுப்புவது குறித்து சீனா மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கிடையில் எவ்வித பேச்சுவார்த்தைகளும் இடம்பெறவில்லை என்றும் சீனத் தனியார் நிறுவனமொன்றே இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார். கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். விவசாயத்துறை அமைச்சரிடம் சீனத் தனியார் நிறுவனமொன்றிடமிருந்து மிருகக்காட்சிச்சாலைகளுக்காக குரங்குகளைப் பெற்றுக் கொள்ளமுடியுமா என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கை தொடர்பில் அவர் வனஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட விடயத்துடன் தொடர்புடைய ஏனைய தரப்பினரது பங்குபற்றலுடன் குழுவொன்றை நியமித்து ஆராய்ந்து வருவதாக அமைச்சரவைக்கு அறிவித்துள்ளார். எந்தவொரு நாட்டுக்கும் விலங்குகளை சாதாரணமாக பரிமாற்றம் செய்யமுடியாது. எம்மைவிட மிகக் கடுமையான சட்ட ஏற்பாடுகள் சீனாவில் காணப்படுகின்றன. எனவே சில ஊடகங்களில் காண்பிக்கப்படுவதைப் போன்று, அரசாங்கம் விலங்குகளை தான் விரும்பியபடி இறைச்சிக்காக ஏனைய நாடுகளுக்கு வழங்கமுடியாது என்றும் அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளர் குறிப்பிடும் அந்தச் சீன நிறுவனத்தின் பெயர் “ஷி செங் வூ யூ அனிமல் பிரீடிங்” என்று கூறப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் பத்தாம் திகதி அந்த நிறுவனத்திடம் இருந்து அப்படி ஒரு கோரிக்கை முன்வைக்கப்பட்டதாகத் தெரியவருகிறது. சீனாவில் தனியார் நிறுவனங்கள் என்று அழைக்கத்தக்க சுயாதீனமான நிறுவனங்கள் உண்டா? என்ற கேள்வி இங்கு முக்கியம். மேலும் இது தொடர்பில் கடந்த புதன்கிழமை கொழும்பில் உள்ள சீனத் தூதரகம் ருவிற்றரில் பிரசுரித்த தகவலின்படி குரங்கு வியாபாரத்தை உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தவில்லை. ஆனால், இலங்கைத்தீவின் பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள் தெரிவித்துவரும் தகவல்களை வைத்துப் பார்த்தால் இந்தக்கதை நெருப்பில்லாமல் புகையவில்லை என்று தெரிகிறது. ஒன்றில் எதிர்ப்பு வந்தபடியால் அரசாங்கம் பின்வாங்குகிறது என்று பொருள். அல்லது அரசாங்கம் ஏதோ ஒரு குரங்கு வித்தை காட்டுகிறதா?

இதுதொடர்பில் விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர என்னென்ன சொன்னார்?

இலங்கையிலிருந்து குரங்குகளை வாங்கச் சீனா தயாராகி வருவதாக தகவல் கிடைத்ததையடுத்து, அமெரிக்காவும் குரங்குகளைப் பெற விண்ணப்பித்துள்ளது என்று அவர் சொன்னார். எனினும், அமெரிக்காவுக்குத் தேவையான குரங்குகளின் எண்ணிக்கை இதுவரை அறிவிக்கப்படவில்லை. சீனாவுக்கு 100,000 குரங்குகளை வழங்குவதற்கான வழிமுறைகளைத் தயாரிப்பதற்கான குழுவொன்றை நியமிப்பதற்கான அமைச்சரவைப்பத்திரம் விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றுமவர் சொன்னார். விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதே பொருத்தமானது. விலங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்பவேண்டாம் என்று எவரும் கூறவில்லை எனவும் அவர் சொன்னார்.

இலங்கையில் உள்ள குரங்கு ஒன்றைப் பிடிப்பதற்கு மட்டும் சுமார் 50 ஆயிரம் ரூபா வரை செலவிட சீன நிறுவனம் தயாராகவுள்ளதாகவும் அமைச்சர் சொல்லியிருந்தார். குரங்கொன்றுக்காக சுமார் 30 ஆயிரம் ரூபா தொடக்கம் 50 ஆயிரம் ரூபா வரையில் சீன நிறுவனம் செலவிட வேண்டியிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அதே வேளை, குரங்குகளை சீனாவுக்குக் கொண்டு சென்று இறைச்சிக்காகப் பயன்படுத்தப்போவதாக வெளியான செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும் அவர் சொல்லியிருந்தார். சீனா குரங்குகளை மிருகக்காட்சிச்சாலை களில் பாதுகாப்பதற்கென்றே கேட்டுள்ளதாகவும் சொன்ன அமைச்சர், குரங்குகளைப் பிடித்து, தனிமைப்படுத்தி, அவற்றுக்கு நோய்த்தொற்று உண்டா என்பதனைப் பரிசோதித்து, கூடுகளில் அடைத்து, சீனாவுக்குக் கொண்டு செல்வதற்கான முழுச் செலவை யும் சீனாவே ஏற்றுக்கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கையில் இருந்து குரங்குகளை 50 ஆயிரம் ரூபா செலவளித்து சீனா 000வுக்குக்0 கொண்டு சென்று, அந்தக் குரங்கை இறைச்சிக்காகப் பயன்படுத்துவதாயின் 50 ஆயிரம் ரூபாவுக்குமேல் லாபம் வைத்து ஒருஇலட்சம் ரூபாவுக்கே விற்க வேண்டிய நிலை ஏற்படும் என்று கூறிய அமைச்சர், ஒரு இலட்சம் ரூபா கொடுத்து குரங்கை வாங்கிச் சமைப்பதற்கு சீனர்கள் தயாராக இருக்கமாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும், இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகள் சீனாவின் ஆய்வு கூடங்களுக்கு அனுப்பப்படலாம் என்று இலங்கை சுற்றாடல் நீதி அமைப்பின் தலைவர் ஹேமந்த விதானகே கூறுகிறார். இலங்கையிலிருந்து அனுப்பப்படும் குரங்குகளை அழகுசாதனப் பொருள்களைச் சோதனை செய்வதற்கும் மருத்துவப் பரிசோதனைகளுக்கும் சீனா பயன்படுத்தலாம் என்றும் அவர் கூறுகிறார். மிருகக்காட்சிச்சாலைகளுக்கான சர்வதேச வரைவிலக்கணங்களின்படி, சீனாவில் 18 மிருகக்காட்சிச்சாலைகளே உள்ளன. ஒரு மிருகக்காட்சிச் சாலைக்கு 5,000 குரங்குகள் என்று கணக்கிட்டாலும் சீனா தெரிவிப்பது நம்பக்கூடிய விடயமாக இல்லை என்றும், இலங்கை அரசாங்கம் ஒரு இலட்சம் குரங்குகளை சீனாவுக்கு அனுப்பினாலும் இலங்கையில் குரங்குகளின் எண்ணிக்கை குறையப்போவதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

“குரங்குகளால் பயிர்களின் உற்பத்திக்கும் விவசாயிகளுக்கும் ஏற்பட்டுவரும் பாதிப்புகள் பாரதூரமானவை. ஆனால், கடந்த சில தசாப்தங்களாகக் குரங்குகளின் கணக்கெடுப்பு நிகழாத நிலையில் குரங்குகளை ஏற்றுமதி செய்ய முற்படுவது இதற்கான தீர்வாக அமையாது. மாறாக, பின் நோக்கிச் சுடுவது போன்று பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும். குரங்குகள் தமது உணவு முறையால் காட்டுவெளியெங்கும் விதைகளைத் தூவி மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் (key stone species) கருதப்படும் இந்தக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவு படுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கைப் பாதுகாப்பு ஒன்றியம் அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டுள்ளது. சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதனையுமே விற்று டொலராக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம் சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்துத் தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும். கூடவே, குரங்குகளினால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டு வரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையொன்றையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும்”.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இந்திய ரூபாவும் ரணிலும்

## வெவ்வேறு உணர்வுகளுக்கு பலியாகும் தமிழ்த்தரப்பு

அ. நிக்ஸன்

**1983** இல் ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கும் வரையும் அமெரிக்காவுடன் இணக்கமில்லாத பரம வைரியாக இருந்த இந்தியா, ஈழப் போர் தொடங்கியதும், அமெரிக்காவுடன் இணக்க அரசியலைப் பேண ஆரம்பித்தது. அதற்கேற்ப இந்திய வெளியுறவுக் கொள்கையை அன்று இந்திராகாந்தி வகுத்திருந்தார்.

அதன் பின்னரான சூழலில் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு இந்திய ஆட்சியாளர்களும் அமெரிக்காவுடன் சீரான உறவைப் பேணி வந்தனர். 2016 இல் டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியின்போது நரேந்திர மோடி அமெரிக்காவுடனான உறவை மேலும் இறுக்கமாகப் பற்றிப் பிடித்தார். இருந்தாலும் ரஷ்ய உக்ரைன் போர்ச் சூழலில் ஜோ பைடன் நிர்வாகத்துடன் பனிப்போர் ஏற்பட்டுள்ளதால், ரஷ்யாவுடனான இந்திய உறவு மேலும் நெருக்கமடைந்துள்ளது.

உக்ரைன் போரினால் ரஷ்யாவின் ரூபிள் வீழ்ச்சியடைந்து பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்கும் சூழலில், அமெரிக்க டொலருக்கு எதிராகப் பதினெட்டு நாடுகளுடன் இணைந்து இந்திய ரூபாவில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்ளும் ஏற்பாடுகளைப் புதுடில்லி முன்னெடுக்கிறது. இந்திய ரூபாவை சர்வதேசச் சந்தையில் பயன்படுத்துவது குறித்துக் கடந்த ஆண்டு ஜூலை மாதம் இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India) ஆரம்ப முயற்சியை மேற்கொண்டது.

இந்திய மத்திய நிதியமைச்சர் பகவத் காரத் நாடாளுமன்றத்தில் இதுபற்றி ஏற்கனவே அறிவித்திருந்தார். 'சர்வதேச நாணயமாக மாறுவதன் முதற்படியாக இந்தியாவின் மத்திய வங்கி - ரஷ்யா, இலங்கை உட்பட பதினெட்டு நாடுகளில் உள்ள அறுபது வங்கிகளில் இந்திய ரூபாவில் பணம் செலுத்துவதற்கு சிறப்பு ஏற்பாடாக வோஸ்ட்ரோ (Vostro) கணக்குகளை ஆரம்பிக்க ஒப்புதல் வழங்கியுள்ளது.'

குறிப்பாக அமெரிக்க டொலர், யூரோ உட்பட அனைத்து வெளிநாட்டு நாணயங்களுக்கும் பதிலாக இந்திய ரூபா நாணயத்தில் வெளிநாட்டு வர்த்தகத்துக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ள இரண்டு இந்திய வங்கிகளில் ஒன்பது சிறப்பு வோஸ்ட்ரோ கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன.

"வோஸ்ட்ரோ" கணக்கு என்பது ஒரு உள்நாட்டு வங்கி வெளிநாட்டு வங்கிக்காக உள்நாட்டு வங்கியின் நாணயத்தில் வைத்திருக்கும் கணக்கு. ஏற்றுமதியை ஊக்குவித்து இறக்குமதியை எளிதாக்கும் ஓர் ஏற்பாடாகும். அதாவது சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்துவதற்குரிய வழிமுறை. இதனை இந்திய ரிசர்வ் வங்கி தயார்ப்படுத்தியுள்ளது.

சர்வதேசச் சந்தையில் அமெரிக்க டொலர் ஆதிக்கத்தில் இருந்து விடுபடவேண்டும் என்று விரும்பும் நாடுகளைக் கூட்டுச் சேர்க்கும் ரஷ்ய இந்திய அரசுகளின் முயற்சி தற்போது சாதகமாகியுள்ளது. இந்திய ரூபா பரிவர்த்தனை மூலம் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி மேற்கொள்ளப்பட்டால், இந்தியாவுக்குக் கூடுதல் லாபம் கிடைக்கும். அந்த லாபம் ஏற்றுமதியை மேலும் அதிகரிக்கும்.

'ரூபா - ரூபிள் வர்த்தகத்துக்கான வழிமுறையை எளிதாக்க இந்திய ரிசர்வ் வங்கி ஒப்புக் கொண்டுள்ளது என்றும் மேலும் சில தனியார் இந்திய வங்கிகளும் ஆர்வம் காட்டி வருவதாகவும் இந்திய ஏற்றுமதி அமைப்புகளின் (Federation of Indian Export Organizations FIEO) தலைவர் ஏ.சக்திவேல் கூறியுள்ளார்.

கடந்த நிதியாண்டில் ரஷ்யாவுக்கான இந்தியாவின் ஏற்றுமதி சுமார் 3.3 பில்லியன் டொலர் என்றும் இந்தப் புது வர்த்தகம் நடைமுறைக்கு வந்தால் அந்த ஏற்றுமதி ஐந்து பில்லியன் டொலராக அதிகரிக்கும் என்று எதிர்பார்ப்பதாகவும் கூறியுள்ளார்.

கடந்த வருடம் மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தில் இருந்து ரஷ்யாவை தனிமைப்படுத்தும் நோக்கில் ஸ்விஃப்ட் வங்கி (Swift Bank) நடைமுறைகளில் இருந்து ரஷ்யாவின் பிரதான வங்கிகள் நீக்கப்பட்டன. இதனால் ரஷ்யாவின் அதிகாரபூர்வ நாணயமான ரூபிள் வரலாறு காணாத வீழ்ச்சியைச் சந்தித்தது.

ஸ்விஃப்ட் வங்கி என்பது சர்வதேச பணப் பரிமாற்றங்களை விரைவாகவும், எளிதாகவும் மேற்கொள்ளும் நிதிசார்ந்த வலைத்தளமாகும். (Worldwide Interbank Financial Telecommunication Swift) 1973 ஆம் ஆண்டில் பெல்ஜியத்தில் நிறுவப்பட்டது. இந்த வங்கியில் இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் பதினொராயிரம் வங்கிகள் தனியார் நிறுவனங்கள் இணைந்திருக்கின்றன.

அமெரிக்க டொலருக்கு நிகரான ரஷ்ய ரூபிள் மதிப்பு, 80 இல் இருந்து 119 ஆக வீழ்ச்சியடைந்தது. ஒரு வாரத்தில் ஏறத்தாழ 29% சரிவை ரஷ்ய ரூபிள் சந்தித்தது.

அணு ஆயுதங்களைத் தயாராக்கும்படி புடின் உத்தரவிட்டதில் இருந்து ரஷ்யா ரூபிள் வீழ்ச்சியடைந்தது. இந்தப் பின்னணியிலேயே அமெரிக்க டொலருக்கு எதிரான போரை புடின் ஆரம்பித்திருக்கிறார். கடந்த வருடம் ஜூலை மாதம் ஆரம்பித்த இந்த முயற்சி தற்போது கைகூடும் நிலையை எட்டியுள்ளது.

தற்போது இந்திய ரூபா மூலம் வெளிநாட்டு வர்த்தகம் குறித்த வழிகாட்டுதல்களை மேற்கொள்ள ரஷ்யாவின் மிகப்பெரிய வங்கியான ஷெபர் வங்கி (Sberbank Sberbank Rossii PAO) மற்றும் இரண்டாவது பெரிய வங்கியான விரிபி வங்கி (VTB Bank is a Russian majority stateowned bank VTB) ஆகியவை இந்திய மத்திய வங்கியின் வோஸ்ட்ரோ கணக்குகளை ஆரம்பிப்பதற்கான ஒப்புதல் வழங்கியுள்ளன.

காஸ்புறொம் (Gazprombank) என்ற ரஷ்யாவின் மிகப் பெரிய தனியார் வங்கி ஒன்றும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பரிவர்த்தனைகளை இந்திய ரூபாயில் மேற்கொள்வதற்குரிய ஏற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது.

ஆகவே சர்வதேச வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்துவது என்ற ரஷ்யாவின் முடிவு உக்ரைன் போரினால் வீழ்ச்சியடைந்திருக்கும் தமது நாணயத்தை மீளவும் புதுப்பிக்கும் நோக்கம் மாத்திரமல்லாமல், தங்கள் மீது தடை விதித்துவிட்டுத் தங்களிடம் பல வர்த்தகங்களில் ஈடுபட்டு கொண்டிருக்கும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு (European Union EU) சரியான பாடம் புகட்ட வேண்டும் என்பதையும் உள்ளடக்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அதிக எரிவாயுவை வழங்கிக் கொண்டிருந்த நாடு ரஷ்யா. மொத்த எரிவாயு தேவையில் 40% க்கு மேல் ரஷ்யாவை, மாத்திரமே ஐரோப்பிய ஒன்றியம் நம்பியிருந்தது. ரஷ்யாவின் எண்ணெய், எரிவாயு ஏற்றுமதிக்கு தடை விதிக்க அமெரிக்கா வலியுறுத்திய போது பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மறுத்துவிட்டன.

ரஷ்யாவைக் கைவிட்டால் எரிவாயுவுக்குச் சிக்கல் ஏற்பட்டுப் பொருளாதாரத்தின் மூலம் இழக்கப்படும் ஆபத்து நேரிடலாம் என்று ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் கருதின. இதனை ரஷ்யாவும் சாதகமாகப் பயன்படுத்தியுள்ளது. இந்தச் சூழலை இந்தியாவும் நன்கு பயன்படுத்திக் கொண்டு அடுத்த கட்ட சர்வதேச பொருளாதார லாபங்களைப் பெறும் முயற்சியை நுட்பமாகக் கையாண்டு வருகின்றது. இந்தியாவை நம்புவதால் ரஷ்யாவுக்கும் இந்த வர்த்தகத்தில் மிகப்பெரிய லாபம் கிடைக்கும். இதனால் அமெரிக்க டொலரை எதிர்க்க விரும்புகின்ற மேலும் பல நாடுகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்திய ரூபாவைப் பயன்படுத்த ரஷ்யா ஆரம்பித்துள்ளது.

தனது நாணயத்தை மாத்திரம் பயன்படுத்திக் கூடுதல் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபட்டு வல்லரசுக்கான அங்கீகாரத்தைச் சீனா நெருங்கிவிட்டது. கடந்த ஒரு வருடமாக இடம்பெறும் போரினால் பாதிப்புகள் ஏற்பட்டாலும் ரஷ்யா நிமிர்ந்து நிற்பதற்குப் பின்னால் சீனா மூல காரணியாகவுள்ளது. இந்தக் காரண காரியத்துடன் இந்திய ரூபா பயன்பாடும் ரஷ்ய ஆதரவுடன் உலகில் அறிமுகமாகிறது.

இந்தப் பின்புலத்திலேதான், இந்திய ரூபாவில் இருதரப்பு வர்த்தகம் மேற்கொள்ள இலங்கை அரச வங்கி ஒன்றும் இந்திய மத்திய வங்கியில் வோஸ்ட்ரோ கணக்கைக் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்னர் ஆரம்பித்துள்ளது.

வோஸ்ட்ரோ கணக்கைத் திறப்பதன் மூலம் இலங்கையிலுள்ள ஒருவர் பத்தாயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான இந்திய ரூபாவை வைத்திருக்கமுடியும் என அறிவிக்கப்பட்டுமிருந்தது. இந்திய - இலங்கை மக்கள் தமக்கிடையே சர்வதேச கொடுக்கல் - வாங்கல்களின்போது, இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியும் எனவும் இலங்கை அரசாங்கம் அறிவித்திருந்தது. ஆனால் இந்திய - இலங்கை ஆகிய நாடுகளுக்கு இடையிலான ஏற்றுமதி -இறக்குமதி வர்த்தகத்துக்கு மாத்திரமே இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியுமென பொருளியல்துறைப் பேராசிரியர் கோ. அமிர்தலிங்கம் கூறுகிறார். ஏனெனில் சீனாவுடனான வர்த்தகத்தில் இந்திய ரூபாவைப் பயன்படுத்த முடியாது என்று அவர் சுட்டிக்காட்டுகின்றார். ஆனால் டொலருக்குப் பதிலாக இந்திய ரூபாவில் ஏற்றுமதி. இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபடுவது தொடர்பாக தெற்காசிய நாடுகளுடன் இந்திய மத்திய வங்கி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது என்றும் மலேசிய அரசுடன் சென்ற வாரம் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் இந்திய மத்திய வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் தெரிவித்துள்ளார்.

டொலருக்குப் பதிலாக ரூபாவில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பை இந்தியா உருவாக்கி வருகிறது. இந்தக் கட்டமைப்பு வரும் ஆண்டுகளில் அதிக முக்கியத்துவம் பெறும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். எனினும் அமெரிக்காவினால் பொருளாதாரத் தடை விதிக்கப்பட்ட ரஷ்யா, ஈரான் உள்ளிட்ட நாடுகளுடன் இந்தியா வர்த்தகத்தில் ஈடுபடுவதும் சிக்கல் நிறைந்ததாக இருக்கும் சூழலில், இந்திய ரூபாவில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்வது குறித்து ஆளுநர் சக்திகாந்த தாஸ் நம்பிக்கை வெளியிட்டிருப்பது இந்தோ - பசுபிக் பிராந்திய அரசியலில் பெரும் தாக்கத்தைச் செலுத்தக்கூடிய ஆபத்துக்கள் உண்டு.

இருந்தாலும் இந்த ஆபத்துக்களை இல்லாமல் செய்து ஏற்றுமதி - இறக்குமதி தொடர்பான பணப் பரிவர்த்தனையை ரூபாவிலேயே மேற்கொள்வதற்கான கட்டமைப்புகளை இந்திய மத்திய வங்கி மேலும் விரிவுபடுத்தி வருகின்றது.

இந்த முயற்சி தற்போது கைகூடியுள்ளதாகவே இந்திய ஏற்றுமதி - இறக்குமதியாளர்கள் நம்புகின்றனர். இதன்மூலம் இந்திய ரூபா சர்வதேச நாணயமாக மாறுவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பும் இந்தியாவுக்கு உண்டு.

ஆனால் அமெரிக்க டொலருக்கு எதிராகச் சர்வதேச வர்த்தகத்தில் தமது நாணயங்களைப் பயன்படுத்திய ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைன், லிபியத் தலைவர் கடாபி ஆகியோர் அதிகளவு லாபத்தைப் பெற்றிருந்தாலும் இறுதியில் அவர்கள் இல்லாமல் போன வரலாறுகளும் உலகின் கண் முன்னே தெரிகின்றன.

அணுசக்தி ஆயுதங்கள் இருப்பதாகக் கூறியே ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்திருந்தது. ஆனால் அது பொய்க் குற்றச்சாட்டு என்றும் தாக்குதலுக்கான உண்மைக் காரணமும் பின்னர் பகிரங்கமாகியது.

இந்தச் சூழலில், இந்திய ரூபாவைப் பயன்படுத்துவது என்ற ரஷ்ய - இந்திய கூட்டு முயற்சி தற்போது வெற்றியளித்து வருவதைப் போன்ற தோற்றப்பாட்டைக் காண்பித்தாலும், அது எந்தளவு காலத்துக்கு நீடித்துச் செல்லும் என்ற கேள்விகளும் விஞ்சியுள்ளன. ஈராக், லிபியா ஆகிய சிறிய நாடுகளைத் தாக்கியது போன்று ரஷ்ய - இந்தியக் கூட்டையும் அதற்கு ஆதரவு வழங்கும் நாடுகளையும் அமெரிக்கா இலகுவில் தாக்கிவிடவும் முடியாது. ஆனால் புவிசார் அரசியல் - பொருளாதார உத்திகளை வேறொரு வகிபாகத்தில் அமெரிக்கா கையாள முற்படுமாக இருந்தால், இலங்கை, நேபாளம் போன்ற சிறிய நாடுகள் அமெரிக்காவுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடிய சந்தர்ப்பங்களையும் மறுப்பதற்கில்லை. ஏற்கனவே பாகிஸ்தான், அமெரிக்கா பக்கம் நிற்கிறது. அத்துடன் சீன - இந்தியப் பகைமை என்பது இலகுவில் உடன்பாட்டுக்கு வரக்கூடியதுமல்ல. இருந்தாலும் வட இந்தியப் பாதுகாப்புக் கருதி ரஷ்யா மூலம் சீனாவுடன் இந்தியா முரண்பாட்டில் உடன்பாட்டுக்கு வரக்கூடிய வாய்ப்புகளும் உண்டு.

ஆனாலும் இந்திய ரூபாவில் சர்வதேச வர்த்தகத்தை மேற்கொள்ள சீனா உடன்படாது. எனினும் ஐரோப்பிய ஒன்றியத்தில் உறுப்பு நாடாகப் பிரித்தானியா இருந்தபோது, சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளில் யூரோ நாணயத்தைப் பயன்படுத்தாமல் தமது பவுண்ஸ் நாணயத்தில் மாத்திரம் பிரித்தானியா ஈடுபட்ட உத்தியைச் சீனாவும் கையாளக்கூடும்.

அதாவது தெற்காசியப் பிராந்தியத்தில் சீனா, தனது நாணயத்தில் மாத்திரம் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுக் கொண்டு , இந்திய ரூபாவில் ஏனைய நாடுகள் வர்த்தகத்தில் ஈடுபடுவதை அனுமதிக்க விரும்பக்கூடும். ஏனெனில் சீன - ரஷ்ய உறவு என்பது ஆழமானது. இந்த உறவுதான் இந்தியாவுக்கும் பாதுகாப்பானது. இந்தப் பாதுகாப்புக்குள் இலங்கையும் இணையுமா? இல்லையா? என்பதைத் தற்போது அனுமானிக்க முடியாது.

ஏனெனில் இந்தியாவைக் கடந்து அமெரிக்க - சீன அரசுகளுடன் சமாந்தரமான - நேரடியான உறவைப் பேணவேண்டும் என்பதே சிங்கள ஆட்சியாளர்களின் நீண்டகால விருப்பம். 1983 இல் என்ன காரணத்துக்காக அமெரிக்காவுடன் இந்தியா கூட்டாளி நாடாக மாறியதோ, அதேபோன்றதொரு காரண காரியப் பின்புலத்தில் தற்போது ரணில் அமெரிக்காவை நெருங்க முனைகிறார். இந்திய ரூபாவைச் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தும் இந்திய - ரஷ்ய வியூகம், டொலருக்கு ஆபத்து என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. ஐரோப்பிய ஒன்றியம் யூரோ நாணயத்தைப் பயன்படுத்துவதும் அமெரிக்க டொலருக்குத் தொடர்ச்சியான வீழ்ச்சிதான். இருந்தாலும் வேறு வகையான அணுகுமுறைகள் மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுடனான உறவை அமெரிக்காவினால் பேண முடிகிறது.

(I ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்தும் அறியாமலும்

## கோபம்



சர்ச்சைக்குப் பேர்போன மொட்டுக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவின் அரசியல் கோட்டை ஆனமடுவ. எனவே, ஆனமடுவவில் இடம்பெறும் முக்கியமான சில நியமனங்கள், சனத் நிஷாந்தவின் ஒப்புதலுடனேயே கடந்த காலங்களில் இடம்பெற்றுவந்துள்ளன.

இந்நிலையில் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு ஓரிரு நாள்களுக்கு முன்னர் ஆனமடுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு திடீரென இடமாற்றம் வழங்கப்பட்டு, மாதம்பை பகுதியில் உள்ள பொறுப்பதிகாரி, ஆனமடுவ பொலிஸ் நிலையத் துக்கு அனுப்பப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் சனத் நிஷாந்தவுக்கு தெரியப்படுத் தப்படவில்லையாம். இதனால் கடுப்பான அவர், உடனடியாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸின் இணைப்புச் செயலாளரை தொடர்பு கொண்டுள்ளார்.

" ஏன் இப்படி நடந்தது? நான்தான் ஆனமடுவ தொகுதி அமைப்பாளர். என்னிடம் கேட்காமல் எப்படி 'ஓஐசி' மாற்றப்பட்டார், இது ஏற்புடையது அல்ல. நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைக் கூட துறப்பதற்கு நான் தயாராகவே இருக்கின் றேன்." எனக் கடுந்தொனியில் கூறிவிட்டு அழைப் பைத் துண்டித்தாராம் சனத் நிஷாந்த எம்.பி.

○ சுழியன்

# இணக்கம்

இழுபறி நிலையில் இருந்துவரும் புதிய ஆளுநர்களுக்கான நியம னம் இம்மாத இறுதிக்குள் இடம்பெறவுள்ளது. இது விடயத்தில் மொட் டுக் கட்சிக்கும், யானைக் கட்சிக்கும் இடையில் தற்போது இறுதி இணக் கம் எட்டப்பட்டுள்ளதாம்.

அந்தவகையில் ஆளுநர் நியமனத்தில் ஐவரைத் தெரிவுசெய்யும் பொறுப்பு மொட்டுக் கட்சியிடமும், நால்வரைத் தேர்ந்தெ டுக்கும் வாய்ப்பு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வழங்கப்பட் டுள்ளதாம். பெயர்ப் பட்டியலை விரைவில் அனுப்பி வைக்குமாறு இரு தரப்பினருக்கும் அறிவித்தல் வழங் கப்பட்டுள்ளதாம். தற்போது ஆளுநர் பதவியை வகிப்ப வர்களுள் ஓரிருவர் அந்தப் பதவியில் நீடிப்பதற்கான சாத்தியமும் உள்ளதாம்.

ஆளுநர் நியமனம் இடம்பெற்றகையோடு அமைச்ச ரவை மறுசீரமைப்பும் இடம்பெறவுள்ளதாக அரசியல் வட்டாரத்தில் அரசல் புரசலாக பேசப்படுகின்றது.




# ஒற்றை ஆள்



முன்னாள் அமைச்சர் ரவி கருணாநா யக்கவின் தாயார் அண்மையில் காலமா னார். அன்னாருக்கு அஞ்சலி செலுத்து வதற்காக ஜனாதிபதி, பிரதமர் உட்பட பல அரசியல் பிரமுகர்கள் சென்றிருந்தனர். இதன்போது அரசியலும் பேசப்பட்டுள்ளது. அஞ் சலி செலுத்துவதற்கு வருகைதந்திருந்த நாடாளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவிடம், "நீங்கள் எப்போது எங்கள் பக்கம் வருவீர்கள்?" என ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், சிரித்தபடியே வினவியுள்ளார். " இன்னும் அப்படியொரு முடிவை எடுக்கவில்லை." என சிரித்தபடியே ராஜிதவும் பதில் வழங்கியுள்ளாராம். " ஒற்றை ஆளாக வருவதைவிட ராஜித மொத்தமாக வருவார்போலும்" என அவ்விடத் தில் இருந்த அமைச்சரொருவர் குறிப்பிட்டாராம்.

# யாழ்ப்பாண வரலாறு



1505-1948 வரை

○ ந.பரமேஸ்வரன்

முற்றவெளிக் கூட்டத்தைத் தொடர்ந்து வண்ணார்பண்ணை றோயல் தியேட்டரில் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ் ஏற்பாடு செய்த கூட்டத்தில் உரையாற் றினார் காந்தி . மாணவர் காங்கிரஸ் கூட்டத்தில் உறையாற்றுகையில் 'இந்து மதம் புனரமைக் கப்படவேண்டும். புராதன இந்து மதத்தைப் புன ரமைக்கும்வேலையை நீங்கள் பொறுப்பெடுங் கள். இங்கு முஸ்லிம் மாணவர்களையோ, பௌத்த மாணவர்களையோ காணவில்லை அவர்களையும் இணைத்துக்கொண்டு சுதந்தி ரத்துக்காகப் போராடுங்கள். அடுத்தமுறை நான் வரும் போது சுதந்திர இலங்கையில் உரையாற்றவேண்டும்' என்றார்.

ரிக்கு விஜயம் செய்த காந்தி அங்கிருந்து ஊர்க வற்றுறைக்கு விஜயம் செய்தார் . ஊர்காவற்று றையில் சேர்.வைத்திலிங்கம் துரைசாமி காந் திக்கு மகத்தான வரவேற்பு அளித்தார். இந்த வரவேற்பு வைபவத்தில் தீவுப்பகுதி மக்களனை வரும் கலந்து கொண்டனர்.பேர்ஸ் ஒன்றும் அன்பளிப்புச் செய்யப்பட்டது. அங்கிருந்து காரைநகருக்குச் சென்றார்.

காரைநகரில் சைவ மகாசபையினரால் பேர்ஸ் ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. காரைநக ரில் இருந்து வரும் வழியில் மூளாய் சித்தி விநா யகர் ஆலயத்தில் வைத்து பேர்ஸ் ஒன்று அன்ப ளிப்புச் செய்யப்பட்டது. அத்துடன் தொல்புரத் தில் தாழ்த்தப்பட்ட சாதிக்காரருக்கான பாடசா லைக்கு அடிக்கல் நாட்டினார்.

## காந்தியின் யாழ். விஜயம் 2



ஹண்டி பேரின்பநாயகம்

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காந்தி பருத்தித்து றைக்கு விஜயம் செய்தார்.வழியில் நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில், நல்லூர் கந்த சாமி கோயில்களில் தரிசனத்தை முடித்துக் கொண்டே புறப்பட்டார். கோப்பாய்,அச்சு வேலி,புத்தூர்,தொண்டைமானாறு,வல்வெட்டித் துறை,வல்லிபுரம் கோயில் போன்ற இடங்க ளுக்கு விஜயம் செய்தார். போன இடங்களில் எல்லாம் பேர்ஸ் ஒன்று அன்பளிப்பு செய்யப்பட் டது (காதி நிதி), அச்சுவேலி , புத்தூர் இரண்டு இடங்களையும் தவிர.

ஏனைய இடங்களை விட வல்வெட்டித் துறையிலேயே கூடுதலான நிதி வழங்கப்பட்டது. வல்லிபுரக்கோயிலில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது . அங்கிருந்து சாவகச்சேரிக்குச் சென்றார். சாவகச்சேரியிலிருந்து வேம்படி மக ளிர் கல்லூரிக்குச் சென்ற காந்தி அங்கு கிறிஸ் தவ மிஷனரியினரைச் சந்தித்தார் . இந்தச் சந் திப்பின்போது பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. வேம்படி மகளிர் கல்லூரி யிலிருந்து வைத்தீஸ்வராக் கல்லூரிக்குச் சென் றார். 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு வைத்தீஸ்வராக் கல்லூரியில் உரையாற்றினார். இந்தக்கூட்டத்தில் 'லேடி' இரா மநாதனும் கலந்து கொண்டார். காந்தி தனது ரையில் 'இந்துக்கள் இந்துக்களாகவே வாழ வேண்டும். நான் ஒரு பழமைவாத இந்து அல்ல . நான் சாதி குறைந்தவர்களையோ, கிறிஸ்தவர் களையோ, முஸ்லிம்களையோ விலக்கி வைக் குமாறு சொல்லமாட்டேன்.நீங்கள் உண்மை யான இந்துக்களாக இருந்தால் ஆலயங்களில் அப்பாவி மிருகங்களைப் பலியிடுவதை நிறுத் துங்கள். ஆலயங்களில் சின்ன மேள நிகழ்ச்சி கள் தடை செய்யப்படவேண்டும்' என்றார்.

திங்கட்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் கும் பரமேஸ்வராக் கல்லூரிக்கும் விஜயம் செய்த ராஜாஜி (காந்தியோடு வந்திருந்தார்) அங்கு மாணவர்கள் மத்தியில் கதர் ஆடையின் அவசியத்தை வலியுறுத்தினார்.

செவ்வாய்க்கிழமை சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ்.மத்திய கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி,இராமநாதன் கல்லூரி, தெல்லிப்பழை நெசவுப் பாடசாலை என்பவற்றுக்கு விஜயம் செய்தார். தெல்லிப்பழையில் காந்தி சாதி ,சமத் துவத்தை வலியுறுத்துவதை அறிந்த உயர்சாதி யினர் காந்தியை வரவேற்பதற்கென அமைக் கப்பட்டிருந்த பந்தலை இரவோடிரவாகப் பிடுங்கி எறிந்தனர். எனினும் ஹண்டி பேரின்பநாயகம் மறுநாள் காலை புதிதாக பந்தல் அமைத்து கூட் டத்தை நடத்தினார்.

[illegible] யாழ்ப்பாணக்கல்லூ

மூளாயிலிருந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூ ரிக்குச் சென்ற காந்தியை மாணவர்களும் ,ஆசி ரியர்களும் வரவேற்றனர். இந்த வரவேற்பு நிகழ்வில் சங்கானை ,சுழிபுரம் பகுதிகளைச் சேர்ந்த பெருமளவு மக்கள் கலந்து கொண்ட னர். இந்த வரவேற்பு நிகழ்வுக்கு சங்கானை கிராமசபைத்தலைவர் வ.பொன்னம்பலம் தலைமை தங்கினார். பேர்ஸ் ஒன்றும் அன்ப ளிப்புச் செய்யப்பட்டது.

சுழிபுரத்திலிருந்து வட்டுக்கோட்டை இந்துக்கல் லூரிக்குச் சென்ற காந்தி மானிப்பாய் ,ஆனைக்கோட்டை ஊடாக மாலை 5.30 மணி யளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலை யத்தை அடைந்தார்.

அங்கு திரண்டிருந்த மக்கள் மத்தியில் யாழ்ப் பாண மக்களுக்கான தனது செய்தியை வழங்கி னார். 6.15 க்கு காந்தியின் புகையிரதம் புறப்பட் டது. யாழ்ப்பாணம் வரும் வழியில் இரண்டு இடங்களில் அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட் டது;அதையும் இங்கு பதிவு செய்யவேண்டும்.

திருகோணமலை வரவேற்புக்குழுவினர் அநுரா தபுரத்தில் வைத்து காந்தியை வரவேற்றதுடன், திருகோணமலை மக்கள் சார்பில் 402.00 ரூபா அடங்கிய பேர்ஸையும் அன்பளிப்புச் செய்தனர்.

பளையிலும் காந்திக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. பளை மணியகாரன் தலை மையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. யாழ்ப்பா ணம் ஒரு வரண்ட பிரதேசம் என்பதை கேள்வி யுற்ற காந்தி யாழ்ப்பாணத்தின் வரட்சி நீங்க வேண்டுமெனப் பிரார்த்தித்தார்.

ஓர் உயர்தர வகுப்பு (HSC) மாணவனாக இருந்து கொண்டு இவ்வளவையும் சாதித்துக் காட்டிய ஹண்டி பேரின்பநாயகத்தைப் பற்றி வர்ணிக்க வார்த்தைகளே இல்லை.உண்மை யிலேயே ஹண்டி ஒரு மாந்தருள் மாணிக்கம் தான்.யாழ்ப்பாண வரலாற்றை எழுதுபவர்கள் ஹண்டியின் வரலாற்றை பொன் எழுத்துக்க ளால் எழுத வேண்டும்.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நெஞ்சள்ளிப் போன குயில்

○ கோகுலராகவன்

வாணி ஜெயராம் அண்மையில் காலமாகி விட்டார். ஒருவர் இறந்தவுடன் அவரைப்பற்றிக் விழுந்தடித்து எழுதுவது என் வாடிக்கை இல்லை. உயிருடன் இருக்கும்போது எழுதி விடுவதே நல்ல அம்சம். கலைஞன் வாழும்போதே கொண்டாடப்படவேண்டும். அதற்காக வாணி ஜெயராமைப் பற்றி எழுத ஏற்கனவே திட்டமிட்டு இருந்தேன் என்று சொல்வதில் உண்மை இல்லை.

ஏனெனில் வாணி ஜெயராம் ஒருபோதும் என் ஆதர்சப் பாடகி இல்லை . ஆனால் அவர் தமிழில் மிகச்சிறந்த பாடல்களைப் பாடினார் என்பது உண்மை.

எஸ் .ஜானகியின் குரல் மலர்ந்த பூவாக இருக்கும் என்றால் வாணி ஜெயராமின் குரல் ஒரு மலரின் மொட்டாகவே இருக்கும். சிலவேளை அவர் எல்லை தாண்டிப் பாடி விடுவார் என்று நினைக்கிறேன். இதனால்தான் தமிழில் அவர் உச்சத்தைத் தொட்ட பாடகியாக மிளிரவில்லை. ஆனால் அவருக்கென ஒரு இரசிகர் கூட்டம் இருந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

ஒரு கட்டத்தில் பழைய பாடகியாகிவிட்டார். எஸ் ஜானகி ,பி.சுசிலா தொடர்ந்து பாடிக்கொண்டிருக்க வாணி ஜெயராம் ஒதுங்கியோ, ஒதுக்கப்பட்டோ போய் இருந்தார்.

ஒரு பாடகன், பாடகி அவர்களது குரலுக்காக இரசிக்கப்பட்டிருக்கவேண்டும். அதன் தொடர்ச்சியே அவர்களது நிலைத்தலுக்கான காரணி.




"மல்லிகை என் மயங்கும் பொன்னான மலரல்லவோ. " என்ற கண்ணதாசனின் பாடலில் அறிமுகம் ஆகி பட்டி தொட்டி எல்லாம் கலக்கிக் கொண்டிருந்தார் வாணி ஜெயராம். உங்களுக்குப் பிடித்த பாடல் எதுவென்றால் தயங்காமல் இந்தப் பாடலைத்தான் வாணி ஜெயராம் உடனே சொல்வார். இதன்பிறகு நிறையப் பாடல்களைப் பாடினார்.

அந்த முதல்பாடலை மட்டும் ஏன் விரும்பினார் என்பது ஆச்சரியம். ஆனால் அந்தப்பாடல் நல்ல தொடக்கம்தான். அனைவரையும் கட்டிப் போட்ட பாடல் அது. இலங்கை வானொலியில் ஒரு நாளைக்கு பல தடவை அறிவிப்பாளர்களால் ஒலிபரப்பப்பட்ட பாடலாகவும் இருந்தது. வாணி ஜெயராம் புதிய அலைக்கான பாடகியாக உருவாகினார் என்று இரசிகர்கள் பேசிக்கொண்டனர். 10000 க்கு மேற்பட்ட பாடல்களை பல மொழிகளில் பாடியவர் வாணி ஜெயராம். ஆனால் தமிழில் மிகக்குறைவான பாடல்களையே பாடினார்.

எம்.எஸ். விஸ்வநாதன் இசையில் உச்சத்தைத் தொட்ட இன்னொரு பாடலான" ஏழிஸ்வரங்களுக்குள் எத்தனை பாடல்." அவரை புகழின் உச்சத்தை அடைய வைத்தது. அவரின் சங்கீத ஞானத்துக்கு ஏற்ப பாடப்பட்ட அற்புத பாடலாக இசை ரசிகர்களால் கொண்டாடப்பட்டது. வாணியுடன் பாட சில பாடகர்கள் தயக்கம் காட்டியதுண்டு. ஏனென்றால் வாணியின் சங்கீத ஞானத்தோடு சமமாகப் பாட இவர்களது சங்கீத அறிவு போதாமல் இருந்திருக்கலாம். வாணி கண்டிப்பான கணித ஆசிரியரும் கூட. அடிப்படைச் சங்கீத அறிவின்றி அவரோடு பாட முடியாது. ஜானகி இதற்கு எதிர்மாறானவர். யாரையும் தன்னிசையோடு இழுத்துக்கொண்டு போய் பாடுவார். ரஜினிகாந்த் உடனும் ஜானகி பின்னணி பாடி இருக்கின்றார். வாணி ,ரி.எம்.எஸ் உடன் நிறையப் பாடல்களைப் பாடியவர். அதில் அனேக பாடல்கள் உச்ச வெற்றியைத் தொட்டவை. ஆரம்பத்தில் ஹிந்திப் பாடல்கள் பாடியே அறிமுகம் ஆனார். இந்தியில் அவருக்கு புகழ் வளரத் தொடங்க புகழ் பெற்ற வேறொரு ஹிந்திப் பாடகியால் வாய்ப்புக்களை இழக்க வைக்கப்பட்டார் வாணி என்ற பதிவும் இருக்கிறது. அதே நேரம் தமிழில் பயன்படுத்தப்படாத பாடகியும் வாணிதான் . இதுவும் ஒருவகையான முரண்தான். எஸ்.பி.பி.,யேசுதாஸ், ஜெயச்சந்திரன், மலேசியா வாசுதேவன், மனோ போன்ற பல பாடகர்களுடன் பாடியவர். இசையமைப்பாளர் சங்கர் கணேஷ், வாணி ஜெயராமை அதிகம் பயன்படுத்திக் கொண்டவர்கள்.

"மேகமே மேகமே "பாடலில்
"எனக்கொரு மலர்மாலை நீ வாங்க
வேண்டும் அது எதற்கோ ? "
என்ற இடத்தில் நாயகியின் மரணத்தை உணர்ந்து அதற்கேற்ப உருகி பாடி இருப்பார்.

"யாரது யாரது சொல்லாமல் நெஞ்சள்ளிப் போவது"
எங்கோ தூரத்தில் கேட்கிறது.

○ இயல்வாணன்



மலையக மக்களின் வாழ்வியலைப் பிரதிபலிக்கும் படைப்புகளை அங்கு பணியாற்றிய பலர் பதிவு செய்துள்ளனர். அவ்வகையில் மருத்துவத்துறையில் பணியாற்றிய நந்தி(சிவஞானசுந்தரம்), தி.ஞானசேகரன், புலோலியூர் க.சதாசிவம் ஆகியோர் முக்கியமானவர்கள். இவர்களில் ஒரு நாவலாசிரியராக, சிறுகதை எழுத்தாளராக, பத்தி எழுத்தாளராக, சஞ்சிகை ஆசிரியராக, வெளியீட்டாளராக, இலக்கிய நிகழ்வுகளின் ஒருங்கிணைப்பாளராக என ஈழத்து இலக்கியத்துக்கு தளராத பணியாற்றி வருபவர் தி.ஞானசேகரன்.

1504 - 1941இல் புன்னாலைக்கட்டுவனில் வைதீக நெறிமுறையில் ஊறிய அந்தணர் குடும்பத்தில் பிறந்த ஞானசேகர ஐயருக்கு 82 வயது நிறைவடைந்துள்ளது. வைதீக நியமங்களுக்கு உட்பட்டு பொற்சிறையில் வாடும் புனிதராக வாழாமல் தனது கல்வியாலும், படைப்பாற்றலினாலும் உயர்ந்து இன்று பெரும் ஆளுமையாக எம்முன் நிற்கிறார். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக் கற்கை பயின்று மலையகத்தில் நீண்ட காலம் மருத்துவராகக் கடமை புரிந்துள்ள இவர் தற்போது கொழும்பில் வசித்து வருகிறார்.

1964 ஆம் ஆண்டு மாசி மாதம் வெளிவந்த கலைச்செல்வி சஞ்சிகையில் எழுதிய "பிழைப்பு" என்ற சிறுகதையுடன் இவர் படைப்புலகுக்குள் பிரவேசித்தார். தொடர்ந்து கலசம், கதம்பம், ஈழநாடு, வீரகேசரி, தினகரன், சிந்தாமணி, தினக்குரல், சுவடு, ஞானம் முதலான பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இவரது சிறுகதைகள் பிரசுரமாயின. தமிழ்நாட்டில் கலைமகளில் இவரது உயிர்த்துணை என்ற சிறுகதை பிரசுரமாகியது.

இத்தகைய 12 சிறுகதைகளை காலதரிசனம் என்ற பெயரில் ஒரு சிறுகதைத் தொகுதியாக 1973 இல் வெளியிட்டார். இவரது இன்னொரு சிறுகதைத் தொகுதி 'அல்சேஷனும் ஒரு பூனைக்குட்டியும்' 1998இல் மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளிவந்தது. 11 சிறுகதைகள் கொண்ட இந்தத்தொகுதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் தமிழ் சிறப்புக் கலைப் பட்டப்படிப்புக்கு ஒரு பாடநூலாக 10 ஆண்டுகளாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 2005 இல் 'ஞானசேகரன் சிறுகதைகள் 'என்ற நூலும் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய முதல் நாவல் 'புதிய சுவடுகள்' வீரகேசரி நிறுவனம் நடத்திய நாவல் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றதுடன் வீரகேசரி பிரசுரமாகவும்







1977இல் வெளிவந்தது. யாழ்ப்பாண வாழ்வியலை வெளிக்காட்டும் வகையில் சாதியப் பிரச்சினைகளையும் வெளிப்படுத்துவதாக இந்தநாவல் அமைந்திருந்தது.

இவரை அதிகம் திரும்பிப் பார்க்க வைத்த நாவல்'குருதிமலை'. மலையக மக்களின் அவல வாழ்வியலை, நில அபகரிப்புக்கு எதிரான அம்மக்களின் எழுச்சியைப் பேசிய இந்நாவலும் வீரகேசரி பிரசுரமாகவே 1979 இல் வெளிவந்தது. "குருதிமலை ஞான சேகரன்' என அழைக்குமளவுக்கு இந்நாவல் பேசப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தமிழ்நாடு மதுரை அமெரிக்கன் கல்லூரியில் முதுகலைமாணி பட்டப்படிப்புக்கு இந்நூல் ஒரு துணைப் பாடநூலாகப் பயன்படுத்தப்பட்டமை இந்நாவலின் முக்கியத்துவத்துக்குச் சான்றாகும்.

மலையக மக்களின் வாழ்வியலைப் பேசும் 'லயத்துச் சிறைகள் '(1994)நாவலையும், கவ்வாத்து (1996) குறுநாவலையும் இவர் எழுதியுள்ளார். ஒரு மருத்துவராக மலையக மக்களோடு பணியாற்றிய வகையில் அவர்களது வாழ்நிலைத் துன்பங்களை நாவல்களாகவும், சிறுகதைகளாகவும் அவர் படைத்துள்ளார்.

தேசியப் இனப்பிரச்சினையை மையமாக வைத்து அவர் எழுதிய நாவல்'எரிமலை'. இது 2018 இல் ஞானம் பதிப்பக வெளியீடாக வெளிவந்ததுடன் ஆங்கில - சிங்கள மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு நூல்களாக வெளிவந்துள்ளன. வி.தில்லைநாதனின் மொழிபெயர்ப்பில்' Valcano' என்ற பெயரில் 2019 இல் இந்நாவல் ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளது. எரிமலை நாவல் 1984 ஆம் ஆண்டு எழுதப்பட்டதாக ஞானசேகரன் குறிப்பிடுகிறார். அகிம்சைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறியதன் காரண காரியத் தொடர்புகளை இந்நாவல் பேசுகின்றது. 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் ஞானம் கலை இலக்கிய சஞ்சிகையை வெளியிட்டு வருகின்றார். தொடர்ச்சித் தன்மையுடன் வெளிவரும் இச்சஞ்சிகை மூலம் பல படைப்பாளிகளை எழுத்துலகுக்கு அறிமுகப்படுத்தியுள்ளார். ஏலவே எழுதிக் கொண்டிருக்கும்படைப்பாளிகள் பலரது ஆக்கங்களும் ஞானத்தில் இடம்பெற்றுள்ளன. பல சிறப்பிதழ்களையும் வெளியிட்டுள்ளார். போர்க்கால இலக்கியச் சிறப்பிதழ், புலம்பெயர் இலக்கியச் சிறப்பிதழ் என்பன இவற்றுள் முக்கியமானதாகும்.

ஞானம் சஞ்சிகைக்காக மூத்த இலக்கிய ஆளுமைகளை இவர் நேர்கண்டுள்ளார். இவற்றில் இரு நேர்காணல்கள்'கா.சிவத்தம்பி :இலக்கியமும் வாழ்க்கையும்'(2005), 'சாகித்தியரத்னா செங்கை ஆழியான்'(2013) ஆகிய நூல்களாக வெளிவந்துள்ளன. சாகித்திய விருது பெற்ற எழுத்தாளர்கள் தொடர்பில் இவர் எழுதிய கட்டுரைகள் 'சரித்திரம் பேசும் சாகித்திய ரத்னா விருதாளர்கள்' (2018) என்ற நூலாக வெளிவந்துள்ளது.

ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் தலையங்கங்கள் புரிதலும் பகிர்தலும்(1999) என்ற தலைப்பிலும், பத்தி எழுத்துகள் யாவரும் கேளிர்(2022) என்ற தலைப்பிலும் வெளிவந்துள்ளன. அத்துடன் பல்வேறு இடங்களுக்கும் மேற்கொண்ட பயணங்களை மையமாக வைத்து பயண இலக்கிய நூல்களையும் எழுதியுள்ளார். அவை அவுஸ்திரேலிய பயணக் கதை(1999), வட இந்தியப் பயண அனுபவங்கள்(2013), இலண்டன் பயண அனுபவங்கள்(2015), ஐரோப்பிய பயண அனுபவங்கள்(2016), கனடாப் பயண அனுபவங்கள்(2018) என நூல்களாக வெளிவந்துள்ளன. தனது ஊரான புன்னாலைக்கட்டுவனின் சிறப்புகளைக் கூறும் 'புன்னை நகர் மான்மியம்'(2021) என்ற நூலையும் இவர் எழுதியுள்ளார். ஞானம் பதிப்பகம் மூலம் பல படைப்பாளிகளின் நூல்களையும், தொகுப்பு நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார். எழுத்தாளர் மாநாடு முதலான பல இலக்கிய நிகழ்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளராகவும் இவர் செயற்பட்டுள்ளார். இவரது பவள விழாவையொட்டி ஞானரதம் என்ற சிறப்பு மலர் விரிவுரையாளர் செ.சுதர்சனால் தொகுக்கப்பட்டு வெளிவந்துள்ளது. இவ்வாறு தமிழிலக்கியத்துக்கு தளராத பணியாற்றிய தி.ஞானசேகரன் ஆயிரம் பிறைகண்டு தொடர்ந்து செயலாற்றி வருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மூளாய் வைத்தியசாலை

# மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு நிதி வழங்கிய
# நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

கா.பார்த்தீபன்
(செயலாளர்.
கூட்டுறவு மருத்துவமனை
சங்கம் (வ-து) மூளாய்.)

யாழ்ப்பாணத்தின் மேற் குப் பகுதியான மூளாய், தொல்புரம், சுழிபுரம், பண்ணாகம் ஆகிய கிராமங்களில் உள்ள கூட்டுறவில் அனுபவமுள்ள 31 பெருமக்கள் எடுத்த பெரும் முயற்சியினால் 1935 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ஆம் திகதி தென் கிழக்காசியாவில் முதன் முதலில் கூட்டுறவு முறையில் அமைக்கப்பட்டதே "மூளாய் கூட்டுறவு மருத்துவமனை". இந்த மருத்துவமனையின் வளர்ச்சியைக் கண்ட அயற் கிராமத்து மக்களும் சேவையை பெற்றுக் கொள்ளத் தொடங்கினர். இதனால் வட்டுக்கோட்டை, அராலி, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, மாதகல், நெல்லியான், காரைநகர் ஆகிய கிராமத்தவர்களும் அதன் வழி அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இலங்கையில் 1919ஆம் ஆண்டு 7ஆம் இலக்கச் சட்டத்துடன் கூட்டுறவு இயக்கம் வேலை செய்யத் தொடங்கியது. அன்றிலிருந்து யாழ்ப்பாணமே கூட்டுறவு முயற்சியின் பிரதான தளமாக இயங்கிவருகின்றது.

மக்களால் மக்களுக்காக உருவாக்கப்பட்ட இந்த மருத்துவமனை ஆரம்பகாலத்தில் அதன் செயற்பாடுகளுக்கும், வளர்ச்சிகளுக்கும் பல தரப்பட்டவர்களிலிருந்தும், மலேசியாவிலிருந்தும், அரச நன்கொடையிலிருந்தும், நிதி திரட்டி செயற்பட்டது . இவ் வேளையில் இலங்கைக்கு 1953ஆம் ஆண்டு வருகை தந்த பிரபல சினிமா நடிகரான, நடிகர் திலகம் பத்மஸ்ரீ டாக்டர்.சிவாஜிகணேசன் குழுவினர், மூளாய் மருத்துவமனையின் வளர்ச்சிக்கு நிதி திரட்டும் முகமாக , 1953 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 28ஆம் திகதி யாழ் .நகர மண்டபத்தில் "என் தங்கை" எனும் நாடகத்தை ஆற்றுகை செய்தனர்.

இந்தநிகழ்ச்சியில் சேர்ந்த முழு நிதியையும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் மூளாய் மருத்துவமனை நிர்வாகத்திடம் அன்பளிப்பாக வழங்கினார். அவ்வேளையில் அவரால் வழங்கப்பட்ட குறித்த நிதி மருத்துவமனையின் வளர்ச்சிக்கு பேருதவியாக இருந்தது. எமது முன்னோர் இந் நிதி வழங்கல் பற்றியும் அவரது பரோபகாரம் பற்றியும் நெடுங்காலம் சிலாகித்தனர்.

நாடக முடிவில் மூளாய் மருத்துவமனையின் தலைவர் திரு. மு.சங்கரப்பிள்ளை, நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சேவையினைக் கண்டு அகமகிழ்ந்து " நடிகர் திலகம் சிவாஜி கணேசனை ஒரு நடிகர் என்ற வகையில்தான் இதுவரை நாம் அறிந்திருந்தோம் ஆனால் அவர் நடிகர் மட்டுமல்ல , தமிழ் மக்களுக்காகப் பணிபுரிவதில் பற்றுடையவரும், சிறந்த அறிவாளியுமாவார் என்பதை இப்பொழுது தெரிந்து கொண்டோம்." என்று பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கும், ஆதரவுக்கும் நன்றி தெரிவித்து உரையாற்றும் போது, " நாடகக் கலையை ரசிப்பதில் யாழ்ப்பாண மக்களின் ஆர்வத்தை நான் தமிழகத்திலுள்ள ஏனைய நாடக நண்பர்களிடம் எடுத்துக் கூறிப் பெருமைப்படுவேன் "என்றார்.

இந்த நிகழ்வு நடந்து 70 ஆண்டுகள் நிறைவடையும் தருணத்தில், அந்த நினைவைக் கொண்டாடும் முகமாக நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களது மகன் திரு. ராம்குமார் மூளாய் மருத்துவமனைக்கு வருகைதந்துள்ளார். இவரின் கரங்களினால் தந்தையார் சிவாஜிகணேசனை நினைவு கூரும் முகமாக நினைவுக் கல் ஒன்றும் நாட்டப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



SIVAJI GANESAN WITH SOME HOSPITAL FRIENDS

# கனத்த இதயத்தில் கரையும் கனவுகள்!

சவுந்து



இலங்கை அரசாங்கம் நிதியில்லை என்று தெரிவித்து உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போட்டு வருகின்றது. 7 ஆயிரம் வரையான அரச ஊழியர்கள் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ள நிலையில் அவர்களின் வாழ்வாதாரம், பொருளாதாரம் தொடர்பில் பெரும் வாதப்பிரதிவாதங்களும், கரிசனைகளும் இன்றளவும் எழுப்பப்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது. இந்த 7 ஆயிரம் அரச ஊழியர்களில் 3 ஆயிரத்து 500 பேருக்கு மேற்பட்டவர்கள் ஆசிரியர் சேவையிலுள்ளவர்களே. அதாவது இவ்வாறு வேட்பு மனுத்தாக்கல் செய்த அரச ஊழியர்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்காக உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கியுள்ளார்கள். மக்களுக்குச் சேவை செய்ய அரசியல்தான் ஒரேவழியா? என்ற விவாதங்களுக்கு அப்பால், வேட்புமனுக்களைத் தாக்கல் செய்த அரச ஊழியர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று கரிசனைகள் எழுப்பப்படுவது நல்ல விடயம்தான். ஆனால், இவர்கள் எவரும், போரால் புலம்பெயர்ந்து மீண்டுவந்த அரச ஊழியர்கள் தொடர்பில் சிறிதும் கரிசனை கொள்வதில்லை என்பது பெரும் அபத்தமும் கவலைக்குரிய விடயமுமே.

இறுதி யுத்தம் எனக் கூறி சர்வதேசத்தின் அனுசரணையுடனும், அனைத்துவித உதவிகளுடனும் நடந்து முடிந்த 'முள்ளிவாய்க்கால்' போர் காரணமாகவும் மேலும் இதற்கு முன்பு தொடர்ச்சியாக ஏற்பட்ட போராலும் பல்வேறு காலகட்டங்களில் அண்டை நாடான இந்தியாவில் ஏதிலிகளாக புலம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கு இலங்கை அரசு மீள்குடியேற்றத்துக்கு ஒரு ரூபாவேனும் வழங்கியிருக்குமா? அல்லது ஒரு நேர உணவுக்கு ஒரு குன்றிமணியளவு அரிசி வழங்கியிருக்குமா?. என்ற கேள்வி இந்தக் காலகட்டத்தில் தவிர்க்க முடியாததா கின்றது. புலம்பெயர்ந்து மீண்டும் நாட்டுக்கு வந்த அரச ஊழியர்களின் மீள்குடியேற்றம் இன்றுவரை அவர்களுக்கு நீள்குடியேற்றமாகவே உள்ளது. மைத்திரி - ரணிலின் ஆட்சிக் காலத்தில், நாடு திரும்பி நம்பிக்கையுடன் மீள தமது அரசு பணிக்கு வந்தபோது பல்வேறு நிபந்தனைகள், நிர்ப்பந்தங்களுக்கு மத்தியிலே பணியை மீளப்பெற்றுள்ளனர். எனினும் அவர்களுக்கான பதவி உயர்வு, சம்பள உயர்வு, சேவைக்காலக் கணிப்பீடு என்பன கிடைக்கப்பெறவில்லை. இதற்காக இந்த அரச ஊழியர்கள் குழுவாகவும் தனியாகவும் அரச அதிகாரிகளிடம் மனுக்களையும் முறையீட்டையும் மேன்முறையீட்டையும் கொடுத்தபோது இதுவரை என்ன பதில் வழங்கப்பட்டுள்ளது? அரசின் வர்த்தமானியைத் தழுவியே அவர்கள் தமது பணியை மீளப்பெற்றுள்ளனர். இந்த வர்த்தமானி 1983 ஆம் ஆண்டு காலத்திலிருந்து காலத்துக்குக் காலம் அரசால் நீடிப்புச் செய்யப்படுகிறது. இந்த வர்த்தமானியின் பயனை முன்னர் வடக்கு - கிழக்கில் வேலைசெய்த சிங்கள சகோதரர்கள் பெற்றுள்ளனர். இந்தக் காலப்பகுதி ஓய்வூதியத்துக்கு கணிப்பீடு செய்யப்படும். பதவியுயர்வுக்கும் பொருந்தும். பலர் இதனை அனுபவிக்காது ஓய்வுபெற்றுள்ளனர். அவர்களது ஓய்வில் ஒவ்வொரு இரண்டு வீதம் ஓய்வூதிய இழப்பு மற்றும் பணிக்கொடை இழப்புக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால் இந்த வர்த்தமானியின் சாராம்சப்படி அவ்வாறு இல்லை. அவை சேவைக்கால கணிப்பீட்டுக்கு உட்பட்டது.

வடக்கு மாகாண உள்ளூராட்சியில் பல பதவிகளுக்கு பெருமளவு வெற்றிடங்கள் உள்ளன. இதில் குறிப்பாக ஆயுள்வேத மருத்துவத்துறை மற்றும் நூலகங்கள் வெற்றிடங்கள் ஆகும். இவற்றுக்கு 2017ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆட்சேர்ப்பு இடம்பெறவில்லை. இதன்காரணமாக யுத்த காலத்தில் புலம்பெயர்ந்த அரச ஊழியர்கள் சேவை மூப்பு, பதவியுயர்வு என்பவற்றைப் பெறமுடியவில்லை. இதில் சிலர் மனவிரக்தியுற்று விருப்ப ஓய்வு பெற்றுள்ளார்கள். மேலும் பலர் ஓய்வு வயதை நெருங்கியுள்ளார்கள். தொடர்ச்சியாக போராடுபவர்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம் கொடுக்கிறார்கள்.

கடந்த வருடம் மே மாதம் முதல் அரச ஊழியர்கள் ஐந்து ஆண்டுகள் சம்பளமற்ற விடுமுறையில் செல்லும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்படி வெளிநாட்டு வேலைவாய்ப்பு அல்லது உள்ளூர் வேலைவாய்ப்பு விடுமுறையை பூர்த்திசெய்த பின்பு பதவியுயர்வு, சம்பள உயர்வு மற்றும் சலுகைகள் என்பவற்றைப் பெறமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. ஆளணிகளை அதிகாரிகள் அனுமதி பெற்று, உரிய ஆளணிகளை நிரப்புவதற்கு தற்போதைய சூழலிலும் அரசு அனுமதித்துள்ளது. அல்லது உரிய பதவிகளுக்கு திணைக்களத்துக்குள் பதவியுயர்வு செய்வதற்குரிய அனுமதியை அரசு அறிவித்துள்ளது. இதே முறைமையை இந்தியாவில் இருந்து திரும்பிய அரச ஊழியர்களுக்கும் பிரயோகித்து, அவர்களைச் சரியான வகையில் உள்வாங்க அரசாங்கம் ஏன் நடவடிக்க்கை எடுக்கவில்லை. ஆசாரி இடம்கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுப்பாரா? என்ற ஏக்கம்தான். இந்தியாவுக்கு ஏதிலியாக சென்று மீண்டும் திரும்ப வந்து பணியைப் பெற்ற அரச ஊழியர்களின் தற்போதைய நிலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல் கடவுள் 18

இராகவன்



இதேபோன்றுதான் இன்னுமொருதுக்க வீட்டுக்குச் சென்றபோதும் நேர்ந்தது. மதியம் வரை ஆழ்ந்துறங்கி விட்டே அங்கும் சென்றிருந்தேன். ஆனால் அங்கே பக்கிள் தவராசா சமுகமளித்திருக்கவில்லை. அவருக்குப் பதிலாக இன்னுமொருவர் 'என்ன அலுவலகத்திலிருந்து நேரே வருகிறீர்களா?' எனக்கேட்டார்.' 'இல்லை வீட்டிலிருந்துதான் நேராக வருகிறேன்' எனச்சொன்னேன். அவர் எனது பதிலுக்குக் காத்திராமல் தனது அலுவல்களை மேற்கொள்ளப் போய்விட்டார்.

இப்பிரதியிலே எனக்கு மெய்யுரைக்க மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது. இங்கே குறிப்பிடவேண்டியதொன்றுண்டு. நான் நெடுங்காலமாகத் தேடிக்கொண்டிருந்த அந்த வீட்டைக் கண்டுபிடித்தேன். எனது வீட்டில் மட்டுமே என்னால் வசிக்க முடியும். அல்லது எனது வீட்டைப் போன்ற ஒரு வீட்டிலேயே என்னால் வசிக்கமுடியும் என்பதே இப்பிரதியில் எனது கொள்கையாகும். அதனால் எனது வீட்டைப் போல ஒரு வீட்டைத் தேடிக்கொண்டிருந்தேன். நான் போகுமிடமெல்லாம் அந்தத் தேடுதலைத் தொடர்ந்தேன். இந்தத்துக்க வீட்டுக்குச் சமுகமளித்துத் திரும்பும்போது தான் எனது வீட்டைப் போன்றிருந்த அந்த வீட்டைப் பார்த்தேன். நான் வசிக்கக்கூடிய வீட்டுக்கெனச் சில நிபந்தனைகள் இருக்கின்றன. இங்கே அதையும் குறிப்பிடத்தான் வேண்டும். இதெல்லாம் வழமையாக எதிர்பார்க்கப்படுவது தான். சில வேளைகளில் உங்களுக்கிருக்கும் நிபந்தனைகளுக்கு ஒத்திசைவாகவும் அமையலாம்.

முதலாவது வெயில் குளிக்கக் கூடிய வீடென்பது. வெயில் குளிக்கும் வீட்டை நீங்கள் உங்கள் வாழ்வில் ஒரு தடவையாவது பார்த்திருப்பீர்கள். அதைப் பார்க்கும் போதே இதமாக இருக்கும். சூழவும் வெண் மணல் பரவியிருந்தால் இன்னுஞ்சிறப்பாக இருக்கும் . வெயில் குளிக்கும் வீட்டுக்கு மூலைமுடுக்கில் இருந்தெல்லாம் வெளிச்சம் புகுந்து பரவிக்கொண்டிருக்கும். வீடு எப்போதும் வெப்பமாக இருக்கும் . அதைவிட ஈரலிப்பேதுமின்றி பளிங்கு போல் துலக்கமாக இருக்கும். ஈரலிப்பில்லாத வீட்டைப் பெற்றவன் பாக்கியவான் என்பதை நீங்கள் ஒருமுறையாவது கேட்டிருப்பீர்கள். வீட்டுக்குத் தொலைவாக மரவரிசை என்பதை அடுத்ததாக முன்வைக்கிறேன். இதற்கான உட்கிடையை நீங்கள் விளங்கிக் கொண்டிருப்பீர்கள். இதை மறுதலைப்படுத்தினால் வீட்டுக்கருகே மரவரிசை விரும்பத்தக்கதல்ல காரணமென்பது மிகச்சாதாரணமானதுதான்.

வீட்டுக்கு மிக அருகே ஒரு தென்னையோ,பனையோ நிற்பதை நீங்கள் விரும்புவீர்களா? இது ஒரு வகை. இன்னொரு வகை வீட்டுக்கு மிக அருகில் மரவரிசையிருந்தால் அதிலிருந்து நிம்மதியை இழக்க வைக்கக்கூடிய, தேவையற்ற சிரமத்தை எதிர்நோக்க வைக்கக்கூடிய, எதிர்பாராத அசம்பாவிதங்களைத் தோற்றுவிக்கக்கூடிய உயிரினங்கள் உள்ளே வரக்கூடிய சாத்தியத்தை எண்ணிப்பாருங்கள். எண்ணிப்பார்ப்பதென்ன, சிலவேளைகளில் நீங்கள் நேரடியாகவே மேற்போந்த உயிரினங்களால் நெருக்கடிக்குள்ளாகியிருக்கக்கூடும். அவ்விதம் நேர்ந்திருந்தால் உங்களுக்கு மேலதிக விளக்கமேதும் தேவைப்படாது. பாதுகாப்பு என்பதற்குள் இதையும் உள்ளடக்க வேண்டியிருக்கும். பாதுகாப்பு என்றதுமே திருடர்களை மனதிற்கொள்வது தவிர்க்க முடியாதது தான் இது எக்காலத்துக்கும் நிலைத்தி ருக்கக்கூடியது. யுத்தகாலத்தில் நிகழத்தக்கவையோடு இந்தத்திருட்டும் சேர்ந்திருக்கும். யுத்தமில்லாத காலத்திலும் இது நிகழத் தக்கது . இங்கு குறிப்பிட்டவற்றைத் தவிர பருவகால நெருக்கடிகளைக் கவனத்திலெடுக்க வேண்டியிருக்கும். யுத்தம் முனைப்படையும் போது நிகழத்தக்கவை பருவகால நெருக்கடிகளாகக் கருதப்படுவதில்லை. மாறாக யுத்தம் முடிந்த பின் படிப்படியாக உருவாகி நிகழத்தக்கவை மட்டுந்தான் பருவகால நெருக்கடிகளாக வரும். வீடு புகுந்து வாளால் வெட்டும் சம்பவங்கள் உங்கள் நினைவில் வந்தால் நான் சொன்னது உங்களுக்கு முழுமையாக விளங்கிவிட்டதெனக் கருதலாம். ஒரு சிறந்த வீடென்பது முற்கூறிய எல்லா விடயங்களில் இருந்தும் பாதுகாப்பதாகும். இந்தப்பாதுகாப்பானது வீட்டில் வசிப்பவரது புத்திக்கூர்மை மற்றும் வீட்டின் அமைவிடம் என்பவற்றினால் மட்டுமே சாத்தியமாகக் கூடியதொன் றென்பதை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

அடுத்துக் குறிப்பிட வேண்டியிருப்பது பெருமழைக்காலத்திலும் ஆழ்ந்துறங்கவும் நகர்ந்துகொள்ளவும் வசதியளிக்கும் வீடாகும். 'பெருமழைக்கும் ஈரங்காட்டா மனையுமொரு பெரும் பேறாகும்' என்பது மனைமாட்சியிலுள்ள வாக்கியங்களுள் ஒன்றாகும். இவை தவிர இரவில் உறங்கும் போது நெஞ்சுறுத்தும் நிசப்தத்தை உணரக் கூடாது. அவ்விதம் உணரும் தருணத்தில் அதைக் குலைக்கும் விதத்தில் எங்கிருந்தாவது ஒலிக்குமொரு பாடலைக் கேட்க வேண்டும். அல்லது எவரேனும் பேசிக்கொண்டிருப்பதையோ, தும்முவதையோ, இருமுவதையோ, காறித்துப்புவதையோ செவிமடுக்கக் கூடியதாயிருக்கவேண்டும். நீர்க்காகங்கள் சலம்பிக் கொண்டு போவதை , நாய்கள் குரைப்பதை, ஒற்றை நாரை கத்திக்கொண்டு செல்வதை, நரிகள் ஊளையிடுவதை, ஆட்காட்டி வெருண்டு கத்துவதை, நத்தையழுவதை, சேவல்கள் தொடர்ந்து கூவுவதை, தேன்குரலி விட்டு விட்டு முரல்வதை, பாரவூர்திகள் இரைந்திரைந்து செல்வதென எல்லாவற்றையுமே கேட்டுக்கொண்டு உறங்கக்கூடிய அமைவிடத்தில் வீடிருக்கவேண்டும்.

இறுதியாகவொன்றைக் குறிப்பிடலாம். பார்த்ததுமே இதுவொரு சிறந்த வீடு எனத் தோன்றக்கூடியதாக வீடிருக்க வேண்டும். உண்மையில் இதைத்தான் நான் முதலில் குறிப்பிட்டிருக்கவேண்டும். ஆனால் தவிர்க்க முடியாத சில காரணங்களால் அது சாத்தியமாகவில்லை. ஆகவே நீங்கள் இதை முதலாவதாக எடுத்துக் கொள்ளலாம்.

நான் மூன்றாவதாக இரங்கல் தெரிவிக்கக் குறித்தவொரு வீட்டுக்குச் சென்றிருந்த போது நான் பார்த்ததாகச் சொல்லியிருந்த வீடென்பது 'பார்த்ததுமே சிறந்ததாகத் தோன்றியதென்பதை ' இப்போது உங்களுக்குச் சொல்லி வைக்க விரும்புகிறேன். அந்த வீடு ஒரு குட்டி இளவரசனைப் போல் தனியே நிமிர்ந்து நின்று கொண்டிருப்பதைப் பார்த்தேன். 'பாம்பு அணுகா மனையுமொரு பாக்கியமாம்'. எனும் மனைமாட்சி வாக்கியம் முற்குறிப்பில் தவறியதால் இங்கே எடுத்துவர வேண்டியிருக்கிறது என்பதற்காக மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

குறிப்பிட்ட வீட்டை உள்ளும் புறமும் ஒன்று பார்ப்பதற்கு இந்தப்பிரதியில் ஏற்பாடில்லை என்பதால் நான் முற்குறிப்பிட்ட சிறப்பியல்புகள் அனைத்தையும் இவ்வீடு கொண்டமைந்துள்ளது என்ற எடுகோளுடன் நகர்ந்து செல்ல வேண்டியிருப்பதைத் தவிர்க்க முடியவில்லை. இதே போன்று இந்தப்பிரதியில் அப்பா உயிரோடிருப்பதும் எனக்கொரு தற்காலிகப் பின்னடைவுதான். ஆனால் அப்பா இங்கே வழமைக்கு மாறாகச் செயற்படுவதால் பாதிப்பேதுமில்லையென 'பக்கிள் தவராசா' சொல்கிறார். நல்லதொரு வீட்டுக்குரிய சிறப்பியல்புகளென நான் முற்குறிப்பிட்டவைக்கு மேலாக எனக்கு மட்டும் ஒரு விசேட சிறப்பியல்பு இடம்பெறவுள்ளது. இங்கேதான் அப்பா நேரடியரகத் தொடர்புபடுகின்றார். அப்பா இல்லாத வீடு சிறப்பானதென்பது அந்த மேலதிகமான சிறப்பியல்பாயிருக்கிறது.

இது எனது வீட்டுக்கு மட்டுமான சிறப்பியல்பாகவே இப்பிரதியில் முன்வைக்கப்படுகிறது.

இது சில வேளைகளில் உங்களுக்கு பொருந்தலாம் அல்லது அப்பாவுக்குப் பதிலாக இன்னொரு உறவு உங்களது வீட்டுக்குப் பொருந்தி வரலாம். அதை இதைக்கவனத்துக் கொள்வது உங்களுக்கானது.

இந்தப்பிரதியில் அப்பாவைத்தவிர இன்னுமொருவரைப் புலனாய்வாளராக அதாவது என்னைப் பின்தொடர்பவராக அறிமுகப்படுத்தினேன். அவருக்குப் பெயரிடுவது அவசியமில்லையெனத் தோன்றியதால் அநாமதேயனாகவே என்னைப் பின்தொடர்கிறார். எனக்கு அயலிலுள்ள கணிகையிடம் வருகை தருபவராகவே காட்டுகிறேன். குறித்த கணிகையின் வீடும் எனது வீடும் மிக அருகருகாகவே அமைந்திருக்கின்றன. அதுவும் குறிப்பாக அவளது படுக்கையறை யன்னலும் எனது படுக்கையறை யன்னலும் நேரெதிராக அமைந்துள்ளன. யன்னல்களைத் திறந்தால் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளலாம். நான் எனது யன்னலை எப்போதும் அகலத் திறந்தே வைத்திருக்கிறேன்.

அவளது யன்னல் ஒன்றில் திறந்தோ, திறந்தும் திறக்காமலோ காணப்படும். எனினும் உள்ளே நிகழ்ந்து கொண்டிருப்பதை என்னால் தெளிவாகப் பார்க்கமுடியும். எனது அநாமதேயன் எனது கணிகையைத் தழுவிக்கொண்டே எனது யன்னலில் கண் வைத்துக் கொண்டிருக்கின்றார். சில வேளைகளில் அவர் எனது அப்பாவைப் போலவுமிருக்கிறார். அவர் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நான் புன்னகைக்கத் தவறுவதில்லை.

அவ் வேளைகளில் அவர் வேறுதிசைகளில் பார்ப்பவராகக் காட்டிக் கொள்கிறார். மேலும் இந்தப்பிரதியில் கணிகையின் பின்புறத் தோற்றமே அனுமதிக்கப்பட்டிருப்பதால் அவள் என்னைக் கண்காணிப்பதில்லை. அவளுக்கும் நான் பெயரிடவில்லை. விரும்பினால் நீங்கள் அவளுக்குப் பெயரிடலாம். அதற்கு இந்தப்பிரதியில் உங்களுக்கு முழுச்சுதந்திரம் உண்டு. இப்பிரதியில் நான் பெயரிடாமல் விட்டிருக்கும் எவருக்கும் நீங்கள் பெயரிட்டுக்கொள்ளலாம்.

(தொடரும்)

நீங்களும் எழுதலாம்

- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- பத்தி எழுத்து
- ஓவியம்

உங்கள் படைப்புக்களும் சஞ்சீவியில் பிரசுரமாக வேண்டுமா?

எதுவானாலும் அனுப்பி வையுங்கள்.
தரமானவற்றை பிரசுரிக்க
சஞ்சீவி
காத்திருக்கிறது.

அனுப்ப வேண்டிய முகவரி:
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

sanjeevi@uthayan.com

தொடர்புகளுக்கு
0773165555

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பழாவளை பாலர் கல்வி சோலை
முதன்மை ஆசிரியர்

Best Wishes

திருமதி குணசிங்கம் சசிகலா
அவர்களின்
மணிவிழா வாழ்த்து



1997.09.01 தொடக்கம் எமது பாலர் கல்வி சோலையில் கல்வி கற்பித்து இன்றுடன் (23.04.2023) ஓய்வுபெறும் எமது ஆசிரியரை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றோம். ஆசிரியருக்கான மணிவிழாவும், பிரியாவிடை நிகழ்வும் நாளை (24.04.2023) திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு பாலர் பாடசாலையில் இடம்பெறும். அனைவரையும் அழைத்துநிற்கின்றோம்.

தொண்டர் சபை, தர்மகர்த்தாக்கள் சபை,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர்கள், பழைய மாணவர்கள்,
நலன் விரும்பிகள்.

Best Wishes

(CR 39709)A-1

# VACANCY @ Jaffna

We are looking for highly motivated and organized individuals to join our team in the following positions, responsible for the operations of our private campus in Jaffna.

**CENTER COORDINATOR**

Requirements:

- Bachelor's degree in Business Administration or a related field
- Proven experience in a similar role
- Strong organizational and communication skills
- Ability to multitask and work under pressure

Responsibilities:

- Manage the daily operations of the campus center
- Coordinate with faculty and staff to ensure smooth functioning of the center
- Develop and implement policies and procedures for the center
- Maintain records and reports related to center operations

**ACADEMIC COORDINATOR**

Requirements:

- Bachelor's degree in any field
- Minimum of 1 year of experience in academic administration
- Strong knowledge of academic policies and procedures
- Excellent organizational and communication skills
- Ability to work collaboratively with faculty and staff
- Proficient in Microsoft Office Suite

Responsibilities:

- Support faculty in developing and implementing academic programs
- Manage academic records and reports
- Ensure compliance with academic policies and procedures
- Coordinate with faculty and staff to ensure smooth functioning of academic operations

**STUDENT RECRUITMENT OFFICER**

Requirements:

- Proven experience in student recruitment
- Strong communication and interpersonal skills
- Ability to work independently and as part of a team

If you are interested in any of the positions listed above, please submit your resume to
**thethm2023@gmail.com** by April 29, 2023



த.கிரிதரன்
தரம் - 11A
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி

# இந்திய...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் அதேபோன்று தெற்காசிய நாடுகளுடன் அமெரிக்கா வேறு வழியிலான அணுகுமுறைகளைப் பின்பற்றுவது கடினம்.

இந்தக் காரணங்களினால் அமெரிக்க - இந்திய உறவும், ரஷ்ய - இந்திய உறவும், சீன-இந்திய உறவும் எதிர்காலத்தில் பல பரிமாணங்களில் முரண்பாடான ஒழுங்கற்ற அரசியல் (Paradoxically Irregular Politics) தன்மையை உருவாக்கலாம். அந்த ஒழுங்கற்ற அரசியல் தன்மைக்குள் இலங்கை தன் நிலையை தக்கவைப்பதில், ரணிலின் பார்வை அமெரிக்காவை நோக்கியதாகவே நீளுகிறது. சீனாவை நோக்கிய நம்பிக்கையும் ரணிலுக்கு உண்டு. அதேநேரம் இந்திய ரூபாவை சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தி இலங்கைத்தீவின் தற்போதைய டொலர் நெருக்கடியைக் குறைக்கும் நுட்பங்களுக்காக மிகச் சாதுரியமாக டில்லியை ரணில் கையாளுகின்றார்.

அதாவது ஈழத்தமிழர் விவகாரம் உள்ளிட்ட இலங்கைத்தீவின் உள்ளக அரசியல் - பொருளாதார ரீதியில் சிந்தித்து, வல்லரசுகளின் புவிசார் அரசியல் - பொருளாதாரப் போட்டிகளுக்குள் சிக்குப்படாமல் சிங்களத் தேசியத்தைக் காப்பாற்றுகிறார்.

இந்தப் பின்னணியில் சிங்களவர்களைக் கையாளக்கூடிய அளவுக்கு ஈழத்தமிழர்கள் மத்தியில் வழிகாட்டல் தலைமைக்குரிய (Guiding Leadership) அரசியல் வகிபாகம் இல்லை என்பது அமெரிக்க இந்திய அரசுகளுக்குப் புரியாததல்ல. ஏன் , சீனாவுக்கும் அது தெரியும். இந்த இடத்தில் ஈழத்தமிழ்த் தரப்புகள், தமக்குள் உள்ளக மோதல்களிலும் சிலை வைப்புப் போட்டிகளிலும் ஈடுபட்டு "தமிழ்த்தேசிய அரசியல் விடுதலை" (Political Emancipation) என்ற பிரதான இலக்கைத் தவறவிட்டுக் கொண்டிருக்கின்றன. வெவ்வேறு உணர்வுகளுக்குள் புகுந்து தம்மை அறியாமலேயே தமிழ்ச் சமூகம் இலகுவாகப் பலியாகிக் கொண்டிருக்கிறது.

# குரங்காட்டி

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் கூறுகிறார்.

ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் சீனாவில்,மிருகக்காட்சிச் சாலைகளில் பேணப்படுமென்று கூறப்பட்டாலும், சீனாவில் குரங்கு இறைச்சி சாப்பிடும் பாரம்பரியம் இருப்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாக குரங்கின் மூளையிலிருந்து தயாரிக்கப்படும் உணவு சீனாவில் அதிகம் விலை கூடியதாகவும் பெரும் செல்வந்தர்களால் மட்டும் நுகரப்படக்கூடிய ஒன்றாகவும் காணப்படுகிறது. இலங்கையில் இருந்து ஏற்றுமதியாகும் குரங்குகள் சீனாவின் விலங்குகள் காப்பகத்துக்கு எடுத்துச் செல்லப்படுமா அல்லது சமையலறைக்கு எடுத்துச் செல்லப்படுமா என்ற சந்தேகத்தை ஒரு பகுதியினர் கிளப்புகிறார்கள்.

இலங்கைத்தீவு இதுவரையிலும் பணிப்பெண்களையும் வீட்டு உதவியாட்களையும் நாட்டுக்கு வெளியே அனுப்பி வருமானத்தைப் பெறுகின்றது. இப்பொழுது குரங்குகளையும் அனுப்பினால் என்ன என்று சிந்திக்கும் ஒரு நிலைமை வந்திருக்கிறதா? அரசாங்கம் உண்மையாகவே குரங்குகளை அனுப்புமா ,இல்லையா என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் ஐ.எம்.எஃப்.பின் நிபந்தனைகளுக்கு கீழ்படிந்த அரசாங்கம் பொதுமக்களை வருத்தும்பொழுது கொதித்து எழும் சிங்கள மக்களைத் திசைதிருப்ப குரங்குவிற்பனை விவகாரம் சில சமயம் அரசாங்கத்திற்கு உதவுமா? அதாவது அரசாங்கம் ஒரு குரங்காட்டியின் வேலையைச் செய்கின்றதா?

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 20ஆம் திகதி முதல் மத நிகழ்வுகளைத் தவிர காலி முகத்திடலில் இசை நிகழ்ச்சிகள், அரசியல் கூட்டங்கள் மற்றும் மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கு அனுமதியில்லை என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது. இது மே நாள் ஊர்வலங்களும் உட்பட எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் காலிமுகத்திடலை நோக்கி அதாவது தலைநகரில் தூதரகங்களின் பார்வைக்குள் வருவதைத் தடுக்கும் உள்நோக்கமுடையது. அதாவது ஆர்ப்பாட்டங்களையிட்டு அரசாங்கம் உசாராகக் காணப்படுகிறது. எனவே மக்களுடைய கவனத்தைத் திட்டமிட்டுக் குழப்பவேண்டும். அதற்கு குரங்குகள் உதவுமா?

நவீன ஊடகக் கலாசாரம் எனப்படுவது ஒரு வகையில் வாசகர்களையும் பார்வையாளர்களையும் குரங்கு நிலையில்தான் வைத்திருக்கின்றது. திட்டமிட்டு ஒரு 'ட்ரெண்டை செற்' பண்ணுவதன்மூலம் ஒரு சமூகத்தின் கூட்டுக் கவனக் குவிப்பை அடிக்கடி மாற்றலாம். குரங்கு கொப்புக்கு கொப்பு தாவுவதைப் போல. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஐ.எம்.எஃப்.பின் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும்போது, பொதுமக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய கோபத்தையும் விரக்தியையும் திசைதிருப்ப குரங்கும் அரசாங்கத்துக்கு உதவுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## இரத்தினம் செல்வராசா



தோற்றம்
05.08.1949

மறைவு
21.04.2023

அவர்கள்
கடந்த (21.04.2023)
வெள்ளிக்கிழமை
காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைவதுடன்
அன்னாரின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த
அனுதாபங்களைத்
தெரிவித்துக்கொள்வதோடு,
அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

---

**உரிமையாளர் மற்றும் பணியாளர்கள்**

**Northway Family Mart**
**&**
**Sunway Family Mart**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org